பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 02 சனிக்கிழமை (17.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 21

## அனுசரணைப் பணிக்கு

## கடும் நிபந்தனை என்கிறது நோர்வே

ஹொங்கொங், டிசெம்பர் 17

**"இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் நோர்வே தனது அனுசரணைப் பணியைத் தொடரும். ஆனால், அது கடுமையான நிபந்தனையின் கீழ்த்தான் நடக்கும்." - இவ்வாறு திட்டவட்டமாகக் கூறிவிட்டார் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொனஸ் கஹ ஸ்ரோர்.**

ஹொங்கொங்கில் வைத்து ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக வர்த்தக நிறுவனக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஹொங்கொங் சென்றிருக்கும் நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர், அதே மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அங்கு வந்திருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நேற்றுமுன்தினம் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் தாம் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்படி கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பது பற்றிய தகவலை நோர்வே அமைச்சர் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர், இலங்கை வெளிவிவகார அமைச்சு, 'கூட்டு அறிக்கை'

(16ஆம் பக்கம் பார்க்க)

## அப்படி ஏதுமில்லை என்கிறது இலங்கை

கொழும்பு, டிசெம்பர் 17

**இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் எந்த முன்நிபந்தனைகளையுமே விதிக்கவேயில்லை என்று இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார, போஷாக்குத்துறை அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா, அரசின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இதனை நாம் புலிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறோம். இப்போது அவர்களின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசுவதா அல்லது இறுதித் தீர்வொன்றைப் பற்றிப் பேசுவதா என்பது பற்றி அரசு எதனையும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக் கடலில் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.17

கிழக்கு கடற்பகுதியில் தாழமுக்கம் மையம் கொண்டுள்ளதால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பலத்த காற்றுடனும் இடியுடனும் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் நகர்ந்துவந்து நேற்றுக்காலை 9 மணிதொடக்கம் மட்டக்களப்புக்கு கிழக்கே 350 கடல்மைல் தொலைவில் மையம் கொண்டிருந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கிய முடிவு இன்று

அமைதி முயற்சிகளின் எதிர்காலம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தீர்மானங்கள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று முற்பகல் 11 மணிக்கு புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களை கிளிநொச்சியில் சந்திக்கின்றார். அப்போது புலிகளின் முக்கிய முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்து இலங்கை அரசு அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்புக்கு எழுதிய கடிதம் புலிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

அது தொடர்பான முடிவு ஒன்றே புலிகள் தரப்பிலிருந்து இன்று வெளியிடப்பட இருப்பதாகவும் - எதிர்பார்க்கப்படுகிறது.

தீர்வுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்காமலும், போர் நிறுத்த உடன்படிக்கையை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான - அவசரமான - பேச்சுகளை நடத்த முன்வராமலும் வெறுமனே ஆசிய நாடு ஒன்றில் பேச்சு நடத்தவருமாறும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைப்பது குறித்துப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் மாணவர்கள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.17

நல்லூர், கோயில் வீதிப் பகுதியில் நேற்றிரவு வீதியில் சென்ற மாணவர்கள் சிலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

நல்லூர் ஆலயப் பின்வீதியில் - துர்க்கா மணி மண்டபத்திற்கு அண்மையில் இரவு 7.45 மணியளவில் மாணவர்கள் தாக்கப்பட்டனர் என்று மாணவர் அமைப்புகள் முறையிட்டன.

வீதியில் சென்ற 5 மாணவர்களில் இருவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சோதனைகளால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு! சீற்றம் அதிகரிப்பு

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினர் மேற்கொண்டு வரும் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், கைதுகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது.

இது அப்பட்டமான போர்நிறுத்த மீறல் மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும்.

படையினரின் அநாரிகமான சோதனை நடவடிக்கையால் அவர்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் சீற்றம் அதிகரித்து வருகிறது.

இப்படிப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் நேரில் எடுத்துக்கூறினர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பிரதிநிதிகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் பளையில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ந.கண்ணனைச் சந்தித்தனர்.

குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அதிகரித்துள்ள படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு அரசியல்துறையினர் விளக்கமளித்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாலதி நினைவுத் தூபியின் வேலி சேதமாக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.17

கோப்பாய் தரைவைப்பகுயில் அமைந்துள்ள மாவீரர் 2ஆம் லெப்டினட் மாலதியின் நினைவுத் தூபியை சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த கம்பி வலை வேலி சேதமாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த நினைவுத் தூபிக்கு சமீபமாக இராணுவமுகாம் ஒன்று அமைந்திருக்கின்றது. இந்த கம்பிவேலி சீருடையினராலேயே சேதமாக்கப்பட்டது என்று ஒரு தகவல் தெவித்தது எனினும் அதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

(ஐ-த)

## புலிகளுக்கு ஆதரவாக மதுரையில் போஸ்டர்கள்

மதுரை, டிசெ.17

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தமிழ்நாடு மதுரையில் நேற்றுமுன்தினம் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. 'தமிழ் தமிழர் இயக்கம்' என்ற பெயரில் அச்சடிக்கப்பட்ட போஸ்டர்களே பல இடங்களிலும் காணப்பட்டன.

தமிழகத்தில் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. இந்நிலையிலேயே புலிகளுக்கு ஆதரவாக மதுரையில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அதில், 'டிசெ.15 ஈழத்தமிழர்களுக்காகத் தீக்குளித்த இளந்தமிழன் அப்துல் ரவூப்புக்கு வீரவணக்கம், புலிகள் மீதான தடையை நீக்கு!, தமிழீழ விடுதலையை அங்கீகரி! - 'தமிழ் தமிழர் இயக்கம்' - என்று குறிப்பிட்டிருந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்பு அமைச்சுப் பதவியுடன் பேராசிரியர் பீரிஸுக்கு?

கொழும்பு, டிசெ.17

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருக்கின்றனர் என உயர் மட்ட வட்டாரங்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மஹிந்த சமரசிங்க ஆகியோர் உட்பட்ட குழுவே அரசாங்கத்தின் பக்கம் வரவுள்ளதாகவும், மேற்படி எம்.பிக்கள் இருவருக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்தப் பொறுப்புகளை பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் ஒப்படைப்பதற்கு யோசனை கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

அடுத்த மாதம் முற்பகுதியில் அமைச்சரவை மறுசீரமைப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்த மாற்றத்தோடு ஐ.தே.கவிலிருந்து வரும் இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் இரண்டை வழங்க ஏற்பாடு செய்யுமாறு தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாப்பொக்கணையில் வியாழன் இரவு கருணா குழு உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு - பொலனறுவை மாவட்ட எல்லைப்பிரதேசமான குடாப்பொக்கணையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கருணா குழு உறுப்பினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் புலேந்திரன் சிவராஜா (ஹரன் - வயது 28) என்றும் அவர் வீட்டில் இருந்தபோது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் அந்தப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வல்லிபுரக் கோயில் சுற்றாடலில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் நேற்றுக் கையளிக்கப்பட்ட வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : சுந்தரலிங்கம்)

# வடமராட்சியில் கண்ணிவெடி அகற்றிய பகுதி உரியவர்களிடம் கையளிப்பு

கரவெட்டி,டிசெ.17

வடமராட்சிப் பிரதேசத்தில் டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் வெடி பொருள் அகற்றப்பட்ட ஒரு பகுதிப் பிரதேசம் நேற்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை வல்லிபுரக் கோயில் சுற்றாடலில் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசத்தின் கையளிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வல்லிபுர ஆலய வீதியில் நடைபெற்றது.

டெனிஸ் நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் அ.யேசுதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டெனிஸ் தொழில்நுட்ப ஆய்வாளர் காரி, கண்ணிவெடி அகற்றியமைக்கான உறுதிப் பத்திரங்களை யாழ்.மாவட்ட டெனிஸ் கண்ணிவெடிச் செயலக அதிகாரி, பருத்தித்துறைப் பிரதேசச் செயலக உத்தியோகத்தர் ஆகியோரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில், வல்லிபுரக் கோயில் பிரதேச கிராமசேவகர் எஸ்.சிவசண்முகமூர்த்தி, பருத்தித்துறைப் பிரதேசத்திற்கான கண்ணிவெடி அகற்றும் பிரிவு உத்தியோகத்தர் இ.இராமகிருஷ்ணன், வல்லிபுரக் கோயில் அறங்காவலர் உறுப்பினர் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி பிரதேசத்தில் டெனிஸ் நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு நேற்றுடன் ஆறுமாதங்கள் பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-70-202)

### யாழ். நகரப் பகுதியில் சுற்றிவளைப்பின்போது

# புலிகள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட மருந்துகள் பொலீஸிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

விடுதலைப் புலிகளின் முன்னாள் அலுவலகம் ஒன்றிலிருந்து தங்களால் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் இராணுவத்தினரால் யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

யாழ். நாவலர் வீதி வீடொன்றில் இருந்து இந்தப் பொருள்களை இராணுவத்தினர் மீட்டிருந்தனர். அந்த வீடு விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளால் அரசியல்துறை அலுவலகமாகவும் மருத்துவ நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. போராளிகள் குடாநாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் அது பூட்டப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் பூட்டை உடைத்து உள்நுழைந்த படையினர் அங்கிருந்த பொருள்களை எடுத்துச் சென்றனர். அதனருகில் இருந்த மற்றொரு வீடும் உடைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது. அங்கிருந்தும் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

இந்த இரு வீடுகளிலும் இருந்து தளபாடங்கள், சைக்கிள்கள், மா மூடைகள், ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் என்பவற்றைப் படையினர் கைப்பற்றித் தம்முடன் எடுத்துச்சென்றனர். பின்னர் அவற்றை யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள்கள், மா மூடைகள் என்பன தன்னுடையவை என நாவலர் வீதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் உறுதிப்படுத்தியதை அடுத்து, பொலீஸார் அவற்றை அவரிடம் திருப்பி வழங்கினர். புலிகளின் அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் தொடர்ந்தும் பொலீஸ் நிலையத்திலேயே வைக்கப்பட்டுள்ளன என்று இன்ஸ்பெக்டர் ஜவ்பர் தெரிவித்தார். இப்பொருள்களை யாழ். நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-க-7)

# பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியான நாட்டுப்பற்றாளர் குணரத்தினம் காலமானார்

பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் உதவிப் பணிப்பாளருமான நாட்டுப்பற்றாளர் ஏ.எஸ்.குணரத்தினம் (வயது - 68) நேற்றுக் கொழும்பில் காலமானார்.

உதைபந்தாட்டம், மெய்வன்மை மற்றும் கரப்பந்தாட்டம் ஆகிய துறைகளின் விளையாட்டு நிர்வாகத்தில் மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் உயர் பதவிகளை வகித்த மிக எளிமையான விளையாட்டு வீரர் குணரத்தினம்.

இறக்கும்வரை வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறையுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்ட குணரத்தினம், தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறை நிர்வாகிகளினால் பெரிதும் மதித்துப் போற்றப்படுபவர்.

தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறை நிர்வாகிகள் மத்தியில் குழப்பமும், போட்டியும், பொறாமையும், பிரிவுகளும் நிலவிய காலங்களில்கூட அவை எவற்றிலும் சிக்காமலும் எல்லோராலும், எப்போதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஓர் உண்மையான விளையாட்டு வீரனாக - பக்கம் சாராமல் - தன்னை வெளிப்படுத்திக் கொண்டவர் ஏ.எஸ்.கே.

விளையாட்டுத்துறை தொடர்பான விதிகளை நிலைநிறுத்துவதில் உறுதியும், கடுமையும் காட்டும் அவர், விளையாட்டு வீரர்களோடும் ஏனைய விளையாட்டுத்துறை நிர்வாகிகளுடனும் பழகுவதில் எப்போதுமே இனிமையை வெளிப்படுத்தியவர்.

யாழ்ப்பாணம், நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.எஸ்.கே. யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், யாழ்.மத்திய கல்லூரியிலும் தனது பாடசாலைக் கல்வியைப் பயின்ற காலத்திலேயே மரதன் ஓட்டத்தில் முன்னணியில் திகழ்ந்து எல்லோராலும் வியந்து பாராட்டப் பெற்றவர்.

சாதாரண விளையாட்டு அதிகாரியாகச் சேவையில் இணைந்து, மாவட்ட மெய்வன்மைப் பயிற்சியாளர், மாவட்ட விளையாட்டு அதிகாரி, மாகாண விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர்



போன்ற பதவிகள் வரை உயர்ந்தவர் குணரத்தினம்

இலங்கை அமைச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் உபசெயலாளராகப் பணியாற்றிய அவர் மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்று, அந்த நிகழ்ச்சிகளை நடத்தும் அங்கீகரிக்கப்பட்ட மதியஸ்தராக- தீர்ப்பாளராக - மதிக்கப்பட்டார். வெளிநாடுகளில் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றிய மெய்வன்மை அணிகளில் மெய்வல்லுநர்களுக்குப் பொறுப்பாக வெளிநாடுகளுக்குச் சென்று தமது சேவையை நாட்டுக்கு வழங்கினார்.

ஸ்ரீலங்கா கால்பந்தாட்டச் சம்மேளனத்தில் பல பொறுப்பான பதவிகளை வகித்த குணரத்தினம், ஸ்ரீலங்கா கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திலும் உயர் நிலைமைகளை அடைந்தார். முதலாம் தர கால்ப்பந்தாட்ட மத்தியஸ்தரான அவர், சர்வதேச ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்குத் தெரிவுசெய்யப்படும் உயர்நிலை மத்தியஸ்தர் குழுவிலும் நீண்டகாலம் அங்கம் வகித்தார்.

இறக்கும் காலம்வரை - கடைசி வாரம் வரை - ஓடிக்கொண்டும், விளையாடிக் கொண்டும் இருந்த - என்றும் வாலிப மிடுக்கோடு கூடிய - ஒரு வீரர் அவர் என்றால் மிகையாகாது.

தமது விளையாட்டுத்துறை சிறப்புப் பெறுபேறுகளுக்கு என்றும் தமக்குத் துணையாக இருந்த - கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பெற்ற உப அதிபராக விளங்கி ஓய்வுபெற்ற - தமது துணைவியார் சிவனேசரத்தினம் (ரதி) அவர்களையும், மூன்று மகன்மார் மற்றும் மகளையும் விட்டுப் பிரிந்து சென்றிருக்கின்றார் குணரத்தினம்.

அவரது விளையாட்டுத்துறைச் சேவையை மெச்சி அவருக்கு 'நாட்டுப் பற்றாளர்' கௌரவம் வழங்கியிருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.

அவரின் பூதவுடல் இன்று முழுநாளும் கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்படுகின்றது.

நாளை காலை 9 மணி முதல் 10 மணி வரை திருகோணமலை கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சிலும், திருகோணமலை கலாசார மண்டபத்திலும் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

நாளை மறுதினம் மூதூரில் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அஞ்சலிக்கு வைக்கப்படும் அவரது பூதவுடல் அங்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடந்த பின்னர், கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கிளிநொச்சியிலும் உணர்வு பூர்வமான அஞ்சலி நிகழ்வுகளுக்கும், அஞ்சலி உரைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

ஏ.எஸ். குணரத்தினத்தின் மறைவு தொடர்பாக தமிழீழ விளையாட்டுத்துறை நேற்றிரவு அஞ்சலி அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுகயீனம் காரணமாகச் சாவடைந்த வடக்கு - கிழக்கு இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளரும், திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறை வளர்ச்சியில் முன்னின்று பணிகள் பல புரிந்தவருமான நாட்டுப்பற்றாளர் குணரத்தினம் அவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறை தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழீழத் தேசிய விளையாட்டுவிழா நிகழ்வுகளிலும் மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளிலும் முன்னின்று உழைத்தவர் குணரத்தினம். தாயகக் கால்பந்தாட்ட வீரர்களின் மனங்களில் என்றுமே மறக்க முடியாத அளவுக்கு தனது பணிகள் மூலம் பங்களிப்பை வழங்கியவர் அவர். - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




# திறந்த பல்கலை விண்ணப்பப்படிவம் விநியோகம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சிறு வணிக முகாமைத்துவம், தொழில்சார் ஆங்கிலம், அடிப்படைச் சிங்களம்,எந்திரவியல் டிப்ளோமா, ஆசிரியர் கல்விக்கான கலை முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படுகின்றன என்று நிலைய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (ஒ)

# திருமறைக் கலாமன்றத்தில் நாளை ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.17

திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா நிகழ்வுகள் நாளை மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும், பதினொரு தேவாலயங்களின் பாடகர் குழாம்களும் இணைந்து வழங்கவுள்ள இந்த நிகழ்ச்சி முற்றிலும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்களைக் கொண்டதாக ஒளி, ஒலி,இசையமைப்புக்களுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயம், கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயம், கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நாவாந்துறைப் பங்கு என்பனவும் அங்கிலிக்கன் திருச் சபையைச் சேர்ந்த நல்லூர் புனித யாக்கோப்பு ஆலயம், சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் என்பனவும் நகர்ப்பணி தென்னிந்திய திருச்சபை என்பனவும், திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்களை வழங்கவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

# வல்லையில் இன்று இரத்ததானம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

அமரர் யோ.செல்வகுருவின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று வல்லை நெடியகாடு இளைஞர்கள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை நடமாடும் இரத்த வங்கிச் சேவைப் பிரிவு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் வைத்து இரத்ததானத்தைப் பெற்றுக்கொள்ளவுள்ளது. இரத்ததானம் செய்ய விரும்பும் பிறரும் அப்போது இரத்தம் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

உதயன்
361, கஸ்தூரிய'ார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தால் அது அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு ஆகும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோர இலங்கையின் புதிய அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த முயற்சிக்கு ஆதரவு திரட்டும் முனைப்பான பிரசாரங்கள் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் மத்தியில் சில தரப்புகளினால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கேள்வி.

புலிகளைத் தடைசெய்யுமாறு நமது அயல் நாடான இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோரியிருப்பதாகத் தகவல்.

புலிகளைத் தடைசெய்யும் விதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தை முடிவெடுக்க வைக்கின்ற வகையில் களத்தில் நிகழ்வுகள் அரங்கேற்றப்படுவதும் கவனிக்கத்தக்கது.

அம்பாறை, அறுகம்பைப் பகுதியில் இலங்கை விமானப் படையின் ஹெலி மீது துப்பாக்கிச் சூடுகள் விழுந்த சம்பவத்தைப் பெரிதாகப் பிரசாரப்படுத்தும் நிலைமை கொழும்பில் காணப்படுகின்றது. புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இந்த ஹெலி மீதான தாக்குதல் முன்னிலைப்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

புலிகள் மீது தடை விதிப்பது உட்படப் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயும் ஐரோப்பிய ஒன்றியக் கூட்டம் இந்த மாத இறுதியில் நடைபெற இருக்கையில், அறுகம்பையில் ஹெலி மீதான தாக்குதலும், அது தொடர்பாகப் புலிகள் மீது ஒருதலைப்பட்ச மாகக் குற்றம் சுமத்திய பிரசாரமும் இடம்பெறுவதும் அவதானிக்கத்தக்கது.

புலிகளுக்கு எதிராக அபகீர்த்தியை ஏற்படுத்தி அவர்களை சர்வதேசரீதியில் மாட்டிவிட வேண்டும் என்பதற்காகவே இத்தகைய தாக்குதல்கள் அரங்கேற்றப்பட்டிருக்கலாம் என்று சில மேற்குலக ஊடகங்களே சந்தேகம் கிளப்பியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு புலிகள் மீது அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு நடைபெறும் சதிவலைத் திட்டம் குறித்து முன்னெச்சரிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளைத் தடைசெய்யக்கோரும் சிங்கள, பௌத்த பேரினவாதிகளின் பிரசாரத்துக்கு வலுவூட்டும் வகையிலேயே இந்த ஹெலி மீதான தாக்குதல் நாடகம் சோடிக்கப்பட்டிருக்கின்றது என்று தெளிவாக எடுத்துரைத்து உணர்த்தியிருக்கின்றார்கள் அவர்கள்.

புலிகளைத் தடைசெய்யக்கோரும் பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகளின் பிரசாரத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுபடுமானால், இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகளைக் குழப்பியடித்த வரலாற்றுத் தவறை அது இழைத்ததாகிவிடும். அது மட்டுமல்ல, மோசமான பின்விளைவுகளையும் கூட இந்நிலைமை ஏற்படுத்திவிடும்.

என்ன நோக்கத்திற்காக இந்தத் தடை விதிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றதோ அந்த நோக்கத்தை அடைய இத்தகைய உத்தேச தடை உதவப் போவதில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் அமைதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற நம்பிக்கையில்தான் இதில் தமிழர் தரப்பு - விடுதலைப் புலிகள் அமைப்பு - ஈடுபாடு காட்டி வருகின்றது. அமைதி முறையில், தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வுத்திட்டம் ஒன்றை பௌத்த, சிங்களப் பேரினவாதம் தராது என்பது திட்டவட்டமாகத் தனக்குத் தெரிந்திருந்தும், சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இருப்பதாலேயே இந்த அமைதி முயற்சிகளில் தான் ஈடுபாடு காட்டிவருவதாகப் புலிகள் அமைப்பு திரும்பத்திரும்பக் கூறிவருவது ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரியாத விடயமல்ல.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடைசெய்தால், சர்வதேச சமூகத்தின் கணிசமான பகுதியை அலங்கரிக்கும் ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்புகளில் இருந்து புலிகள் அந்நியப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், விடுதலைப் புலிகள் நேரடியாகத் தொடர்புபட்ட அமைதி முயற்சிகளிலிருந்து சர்வதேச சமூகத்தையும் விடுதலைப் புலிகளையும் கூட அது அந்நியப்படுத்திவிடும்.

அத்தோடு, தமிழர் தரப்பை அடக்கி, ஒடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகளையும் அது ஊக்குவித்து, அமைதி முயற்சிகளின் கடப்பாடுகளிலிருந்து அவற்றை விலக வைத்து, அடக்குமுறையைத் தீவிரப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அத்தகைய முடிவு தூண்டும் என்பதும் முக்கியமானதாகும்.

ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்தால், அது புலிகளைப் பேச்சு மேசைக்குக் கூட்டிவரச்செய்யும் என்பதிலும் பார்க்க, முழு அமைதி முயற்சிகளையுமே குழப்பி, நாசமாக்கி, மீண்டும் ஒரு கொடூரப் போருக்கே வழிகாட்டும் என்பது திண்ணம்.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை அடையும் முயற்சியில் சர்வதேசத்தின் தார்மீகப் பங்களிப்பு சரிவர நல்கப்படாவிட்டால், போராடியாவது அந்த அபிலாஷைகளை அடைவதே ஒரே வழி என்ற நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்படுவதும் தவிர்க்க முடியாததாகும்.

இலங்கை இனப்பிரச்சினையின் கொடூர அனுபவங்களால் ஈழ மண்ணாகிய தமது தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்த பல லட்சக் கணக்கான தமிழ் மக்கள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எங்கும் நிலைகொண்டு பரந்து வாழ்கின்றனர். அந்த நாடுகளுக்காக விசுவாசத்தோடு தமது உழைப்பை நல்கி, அந்தந்த நாடுகளின் சுபீட்சத்திலும் அவர்கள் பங்காளிகளாகி நிற்கின்றனர்.

அவர்கள் தமது மூலத் தாயகத்தின் உரிமைக் குரலாக - தமது இனத்தின் ஏக மற்றும் அதிகார பூர்வப் பிரதிநிதிகளாக - விடுதலைப் புலிகளையே கருதுகின்றனர்.

அப்படி இருக்கையில், புலிகளுக்கு எதிராக - ஒரு தலைப்பட்சமாக தடை விதிக்கும் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் செல்வது, ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளில், அவற்றின் வளம் கொழிக்கும் சுபீட்சத்துக்காக உழைக்கும் - அந்த நாட்டின் பிரஜைகளாகத் தம்மை மாற்றிக் கொண்டிருக்கும் - பல லட்சம் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு எதிராக அந்த நாடுகள் செய்யும் துரோகச் செயலாகவும் அது அமையும்.

எனவே, ஐரோப்பிய ஒன்றியம், ஒரு முடிவுக்கு வரமுன்னர் இவற்றை சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

# நேரடிப் பேச்சுகளில் ஈடுபடுவதன் மூலமே தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கும்

## புலிகளுடனான சந்திப்பில் கண்காணிப்புக்குழுவின் தலைவர்

வவுனியா, டிசெ.17

அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக நேரடியாகப் பேச்சுகளில் ஈடுபடுவதன் மூலமே தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு ஒன்றைக் காண முடியும்.

இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஷக்பக் ஹெக்கிலண்ட் தெரிவித்தார்.

புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த அவர், பின்னர் ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், பொருண்மியத்துறையின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் ராம், முன்னரங்க காவல் பணிப் பொறுப்பாளர் வசந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய கண்காணிப்புக் குழுத்தலைவர் -

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண வேண்டியது அவசர, அவசிய பணியாக இருக்கின்றது. நேரடியாக இருதரப்பினரும் கலந்துரையாடுவதன் மூலமே இந்த நிலைக்குத் தீர்வைக்காண முடியும் என இருதரப்பினரிடமும் தெரிவித்துள்ளோம் - என்றார்.

வவுனியாவில் இடம்பெறும் சம்பவங்களுக்கும் தமது அமைப்புக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்பில் உறுதிபடத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஓமந்தைச் சாவடியில் தேவையற்ற முறையில் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று புலிகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் சுட்டிக்காட்டினர். (எ-3)

## 386 றிசேவ் பொலீஸாருக்கு வடக்கு - கிழக்குக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 16

386 றிசேவ் பொலீஸ் உத்தியோகத்தர்கள் உடன்நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நீண்ட நாள்களாகக் கடைமையாற்றும் றிசேவ் பொலீஸ் உத்தியோகத்தர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்று வருவதற்கு இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும் என்றும் பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

386 றிசேவ் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு அதிக எண்ணிக்கையான பொலீஸார் தேவைப்பட்டதினால் இடமாற்றம் பிற்போடப்பட்டது என்றும் கூறப்பட்டது. (க)

## கரம்பொன் தெற்கில் 13 பேருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு


யாழ்ப்பாணம், டிசெ.17

கனடாவில் இயங்கும் ஊர்காவற்றுறை - கரம்பொன் தெற்கு மேம்பாட்டுக் கழகம், அண்மையில் கரம்பொன் தெற்கைச் சேர்ந்த 13 பேருக்கு சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியது.

ஆண்களுக்குரிய 10 சைக்கிள்களும், பெண்களுக்குரிய மூன்று சைக்கிள்களும் இவ்வாறு வழங்கப்பட்டன என்று கரம்பொன் தெற்கு மேம்பாட்டுக் கழகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சைக்கிள் வழங்கும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி கரம்பொன் தெற்கு கேணி முன்றிலில் கழகத்தின் தலைவர் ம.நவரெத்தினம், கழக உறுப்பினரான செ.கிருஷ்ணகோபால், கரம்பொன் கிளைப் பொறுப்பாளர் க.கனகரெத்தினம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய கழகத்தின் தலைவர் ம.நவரெத்தினம், கல்விச்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட சைக்கிள்கள் வழங்கும் பணிக்கு ஊக்கம் அளித்த க.இராமகிருஷ்ணன் அதற்கு உறுதுணையாகவிருந்த கரம்பொன் கிளைப் பொறுப்பாளர் க.கனகரெத்தினம் ஆகியோர் நன்றிக்கு உரியவர்கள் என்று தெரிவித்தார். (எ)



நிகழ்வில் மாணவன் ஒருவனுக்கு சைக்கிள் வழங்கப்பட்டபோது...

## குடாநாட்டில் 9 மாத காலத்தில் 909 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

### மாவட்ட மட்டத்திலான ஆய்வு அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.17

கடந்த ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான ஒன்பது மாதக் காலப் பகுதியில் குடாநாட்டில் தொள்ளாயிரத்து ஒன்பது சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கை யாழ். அரச அதிபர் கே.கணேஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று சிறுவர் பாதுகாப்புக் குழுவின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஸ்ரீபன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மாவட்ட இணைப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சிறுவர் பாதுகாப்புக்குழு குடாநாட்டில் உள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆய்வுகளை நடத்தியது. கடந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கை வருமாறு:-

கோப்பாய் -167, யாழ்ப்பாணம்-127, சண்டிலிப்பாய் -96, சாவகச்சேரி-89, பருத்தித்துறை- 83, வேலணை -77, நல்லூர் -54, சங்கானை -54, தெல்லிப்பழை -48, உடுவில் -45, ஊர்காவற்றுறை -32, காரைநகர் -14, நெடுந்தீவு 13, கரவெட்டி -100.

மேற்படி சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களைத் தற்கொலை முயற்சி, சிறுவர் உழைப்பு, பாடசாலை இடைவிலகல், போஷாக்குப் பற்றாக்குறை, பெற்றோர் புறக்கணிப்பு, பாலியல் துஷ்பிரயோகம் எனப் பல்வேறு வகைக்குள் அடக்கலாம்.

இத்தகைய துஷ்பிரயோகச் சம்பவங்கள் பல சமூக மட்டத்தில் இடம்பெறுகின்றன. அவற்றில் ஒரு சில துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்கள் மட்டுமே வெளிவருகின்றன.

இவ்வாறு வெளிவராமல் திரைமறைவில் பல சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

மாதம் ஒன்றிற்கு சுமார் 85 சிறுவர் துஷ்பிரயோகங்கள் சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் இனம் காணப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-13)

## சிறந்த பண்ணையாளர்கள் சண்டிலிப்பாயில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

சண்டிலிப்பாய் கோட்டத்தில் சிறந்த பண்ணையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த பண்ணையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ச.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொண்டார்.

சிறந்த பண்ணையாளர்களாக ஆடு வளர்ப்பில் சி.இரவீந்திரன் (மாகியப்பிட்டி), ஆ.சகாதேவன் (சண்டிலிப்பாய் வடக்கு), வை.கதீஸா (தொட்டிலடி) ஆகியோரும் -

மாடு வளர்ப்பில் து.நந்தகுமார் (ஆனைக்கோட்டை), அ.அருள்ராஜன் (மானிப்பாய்), சு.விமலநாதன் (வடலியடைப்பு) ஆகியோரும் -

கோழி வளர்ப்பில் சு.சுபதீஸ்வரன் (கல்வளை), திருமதி சி.கௌரி (மாதகல்), க.பரமேஸ்வரன் (மானிப்பாய்) ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்குரிய பரிசில்களையும் சான்றிதழ்களையும் சண்டிலிப்பாய் மத்தி கிராம சேவையாளர் பு.நிருபன் வழங்கிக் கௌரவித்தார்.

இதில் கால்நடைப் பிரிவு போதனாசிரியர்கள், கால்நடை உணவு, சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் மற்றும் பண்ணையாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். (த-13)

### நாளை

மார்கழி 3
ஞாயிற்றுக்கிழமை
18.12.2005
திதி: திருதியை
பிற்பகல்: 01.38 வரை
நட்சத்திரம் : பூநர்பூசம்
பிற்பகல் :02.44 வரை
சுபநேரம் : 09.23- 10.53
ராகுகாலம் : 04.53- 06.23
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எமது மனம் மென்மையானது என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் சிறிது சிந்தித்துப் பார்த்தால் கருங்கற்பாறை என்று கூடக் கூறமுடியாதளவிற்கு அது கடினமாக இருக்கும்.

- ஓர் அறிஞன்.

# யாழ்.மருத்துவபீட மாணவர் ஒன்றி
# Silver Jubilee of Medical

## அருளாசிச்செய்தி

அன்பு சால் பெருந்தகையீர், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் ஆனது இன்று இருபத்தைந்தாம் ஆண்டு வெள்ளிவிழாவில் தனது காலைப்பதித்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடமானது பல நெருக்கடிகளின் மத்தியில் பணியாற்றி தலை நிமிர்ந்து நிற்கின்றது. இன்று இந்நாட்டில் மட்டும் அல்ல உலகளாவிய ரீதியில் ஆளுமை கொண்ட வைத்திய கலாநிதிகளை உருவாக்கிய பெருமை ஒன்றியத்தைச் சாரும். இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் இருந்தாலும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பணிகளே இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு வித்திட்டவர்கள் துணை வேந்தர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் எனப் பலதரப்பட்ட சமூகத்தினரினதும் பணிகள் ஆகும். இந்நிலையில் மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் காலத்தின் தேவையை உணர்ந்து மக்களின் தேவைகளை அவ்வப்போது அறிந்து பணி ஆற்றிய சிறப்பை கொண்டவர்கள். மருத்துவபீட மாணவர் ஒன்றியம் இன்னும் பல நூறு ஆண்டுகள் பணியாற்றி மக்கள் சேவையே மகேசனின் சேவை என நினைத்து பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்! வளர்க இப்பணி!!

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*
*இரண்டாவது குருமஹாசந்நிதானம்,*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.*

## சிவத்தமிழ்ச்செல்வியின் வாழ்த்து

மருத்துவர்களாகவும் ஆசிரியர்களாகவும் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் கொழும்பிலே கற்பித்த காலத்தில் ஒரு இஸ்லாமியப் பெரியவரிடமிருந்துபெற்றுக்கொண்ட அறிவுரையாகும். இதனை முன்னிட்டு மருத்துவத்துறையில் பணிபுரிபவர்களுக்கு நான் பெருமதிப்புக் கொடுப்பது வழக்கம். யாழ்ப்பாண மக்களுக்கு வாழ்வும் வளமும் கல்வியின் எழுச்சியிலேயே தங்கி உள்ளதை உலகமே ஒப்புக்கொள்ளும். இந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடம் எமது கவனிப்புக்கும், கண்காணிப்புக்கும் மதிப்புக்கும் உரியதாக விளங்குகிறது. இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்த இம்மருத்துவ மாணவர் ஒன்றியத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆண்டுகளின் ஓட்டத்தில் பணிகளின் சிறப்பு கருதப்படுகிறது. கல்வி மேம்பாடும், சேவை செய்யும் மனப்பான்மையும், உண்மை, நீதி, பொறுமை ஆகிய பண்புகளும் மருத்துவ பீடத்துக்கு சிறப்பாக அமைய வேண்டும். எமது தமிழினம் உன்னிப்பாக இதனைக் கவனிக்கிறது. மெஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் குருடு என்கிறார் ஒரு பெரியவர். ஆகவே கடவுள் நம்பிக்கையோடு மருத்துவ பீடத்தை. ஓங்க வைப்பது அனைவரதும் ஒன்றுபட்ட விருப்பாகும். இன்றைய வெள்ளி விழாவைப் போல இந்த ஒன்றியம் பொன்விழா, வைரவிழா, பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா என்பவற்றையும் கண்டு உயர்வடைய வேண்டும் என்று பாராட்டி அமைகின்றேன்.

*கலாநிதி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி,*
*சமாதான நீதிபதி, ஸ்ரீதுர்க்காதேவி தேவ தானம்,*
*தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.*

## Memorandum from Senior Treasurer-MSU

Medical students of the University of Jaffna are celebrating the Silver Jubilee of their union with religious functions, release of magazines and, honouring the well wishers and the friends who rendered their valuable support for the up liftment of their position. I wish them for their success in all the functions related to this jubilee celebration. It is unfortunate that the students from the south have just left the faculty before the commencement of this memorable celebration due to the sudden disturbances erupted in Jaffna again, as it was, few years back. I hope the conducive environment for education and other social activities for all the groups of students and people will be brought by the appropriate authorities to avoid further crises and to bring back normalcy in our area.

*Dr.D.Gunarajasingam,*
*Senior lecturer,*
*Faculty of Medicine, University of Jaffna.*

## Sincere blessing........

I have the great pleasure in giving this message to the publication to be published to commemorate the 25th year of celebration.

I take this opportunity to express my gratitude to all members of the MSU for their corporation and steady support to me from the date of inception as Head / Anatomy in 1995 and Dean of the faculty from 1997 to 2000.

I would never forget that during my period as Dean, the MSU brought a declaration that there will not be unwanted harassing to junior students by any form of ragging. I am proud to reveal the fact that the MSU stopped the consumption of alcohol during student functions, within the compound of the faculty. This is also done during my deanship period.

It is regrettable that the deplorable situation in Jaffna peninsula, since 1983, has brought progressive shortage of academic staffs and other inconveniences to the faculty as well as the teaching hospital. This has afflicted the expected effectiveness of this faculty. In spite of this the standard of the final end product is still well maintained. The commendation for this achievement is to the will and courage of teachers and MSU.

My sincere blessing to the MSU to cooperate continuously with the faculty and the hospital in order to produce quality undergraduates.

*Dr.R.Rajendraprasad,*
*Head / Anatomy, Former Dean*
*Faculty of Medicine, University of Jaffna.*

## Message from the Archdeacon of Jaffna

I am very happy indeed to send this message for the souvenir that the Jaffna University Medical Students' Union is publishing in connection with their Silver Jubilee Celebrations.

My heart goes out to the present generation of Medical Students attached to the Jaffna University. I marvel at their resilience that enables them to carry on and even produce excellent results in examinations, in the midst of their life of fear and tension and also deprivations for no fault of their own. It is said that the success of an individual or an institution is not measured by the heights attained but by the obstacles that were overcome.

Well, you and your colleagues on completion of your medical college career will no doubt carry with you many memories of your life and time in this institution. Please remember when you go out into the world you get no bonus points for being in this medical profession but you are measured only by what you are made of and what is within you.

May God guide you in all your activities in the years to come.

My good wishes to all of you and May God bless you as you enter into a new century of service.

*Ven.S.P.Nesakumar,*
*Archdeacon of Jaffna.*
*Church of Ceylon.*

## DISIRES OF THE CHURCH OF SOUTH INDIA

I am glad that the Medical Students Union of the University of Jaffna will be celeberating their 25th anniversary on 17th December 2005. The inauguration of the Medical Faculty in Jaffna is an important landmark in the history of Jaffna. From the beginning, very eminent Physicians and Surgeon have laboured in this Faculty. Just before the racial riots in 1983 the Medical Faculty of Jaffna had considred to the best in the whole Island. The Students who passed out of this Medical school are shining in almost all parts of the world. I had the privilege of meeting some of them in UK, USA and Australia. They are in no way inferior to Medical Graduates produced by affluent countries. The doctors of Jaffna Medical Faculty are respected for their intelligence and hard work.

We are concernd that only very few doctors of this faculty are remaining in our motherland and serving our own people. It is our hope and prayer that this attitude will change and the Medical Faculty of Jaffna will produce graduates who will have real love affection for the land of their birth.

**Rt. Rev Dr.S.Jebanesan,**
**Church of South India.**

## Message from the Student Counsellor

It gives me great pleasure to send this message for the occasion of silver jubilee anniversary of the Medical Students' Union.

The Jaffna faculty of medicine has struggled and is still struggling to provide the best education for its students. As we look around us we realize the truly wonderful job it has done to make us all successful in our carriers with so limited resources and personal. It is because of marvellous relationship has been developed between the medical students and teachers. Prime goal of the Medical Students' Union is to promote unity and cooperation among students and teachers and to keep a good relationship with the faculty of medicine to further the interest and welfare of our medical students and medical faculty.

I was privileged to have been given the opportunity to work with medical student's union as president of Medical Students' Union 1999. That was exemplary in all respects. What we were able to achieve a lot and tumultuous years was a testimony to the dedication of individuals such as Dr. Logendraraj, Dr.S.Nalayini, Dr. Umasangar, Dr.Sivaruban and Dr. Johnson.

Fortunately I got the opportunity to guide the student union as student counsellor. This is wonderful opportunity for me to share my experience with them.

There are lot of new challenges for medical students and their union. We have to prepare ourselves to face the challenges. Medical Students' Union itself need lot of organizational changes.

We are now in a critical situation to reorganize the Medical Students' Union in order to empower it. All the teaching staffs and passed out students should help them to face these challenges effectively. I'm sure they will over come all the challenges. All of them will bless for their success.

*Dr.R.Surendrakumaran,*
*Student Counsellor,*
*Faculty of Medicine, University of Jaffna.*



## Me...
## the Jaffna Medical G...

I am really in a sense of delight in pro... this appreciation message to Jaffna Medica... dents' Union's Silver Jubilee Celebration Jo... on my capacity as Director, Teaching Ho... Jaffna and president of Old Student Assoc... "Alumni" of Medical Faculty, Jaffna Unive...

The Jaffna Medical Students' union is no... concerned with General welfare of Medica... dents, but it has taken active part in social ... opment and health promotional activities of ... community in various ways. They extende...

## Message f...
## of Jaffna M...

It gives me the greatest pleasure to tak... opportunity of sending a message to medic... dents' union which is releasing a souvenir ... ebrate its silver jubilee this year.

I am proud to say it is a body which mai... good attitude and conduct. Further it looks... the well being of each student in the facult...

They are very much helpful to JMA to ...

## Message fro...

I am happy to give a message to this sou... Being a staff member in this faculty for th... twenty one years, I know the hardships fac... the Faculty and the Students of this Faculty. ... the students of other Medical Faculties ha... privileges of enjoying the luxury of being m... students and other comforts, those who e... the Jaffna Medical Faculty had to face a ... threats and difficulties. The Faculty has bee... ing many ups and downs and was able to ... stand all the hardships due to the cooperati... tween the staff of the Faculty, Consultants ... Teaching Hospital, Jaffna, Teaching Ho... Batticaloa, General Hospital Vavuniya and ... Hospital Trincomalee and the students. Th... and students have worked together in runni... courses smoothly. Even though the study ... was extended from five years to eight yea... students were patient and have understoo... accepted the unfortunate situation. Howeve... we are able to reduce the length of study pe...

வாழ்த்துகின்றோம்
லாவண்யா
மூக்குக்கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# வேலை வழங்கக் கோரி போராட வேலையற்ற பட்டதாரிகள் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டால் யாழ்.செயலகம் மற்றும் மாகாண அமைச்சு அலுவலகங்களின் முன்னால் சாத்வீக வழியிலான போராட்டங்களை நடத்தப் போவதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் யாழ். கல்விவலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய வேலையற்ற பட்டதாரிகள் இணைந்தே இந்த முடிவை எடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாக பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள்வேலைவாய்ப்பு கிடைக்காத நிலையில் உள்ளனர்.

இவர்களில் பட்டச்சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி பிந்தியோர், பரீட்சைகளுக்குத் தோற்றாதோர், ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு மட்டும் தோற்றியோர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் உரிய தரப்புகளுடன் குறிப்பாக மாகாண அமைச்சுகளுடன் கதைத்தும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே எதிர்வரும் காலங்களில் விரைவாக வேலைவாய்ப்பை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்காதுவிடின் சாத்வீக வழியிலான போராட்டங்களை யாழ்.செயலகம், மாகாண அமைச்சு அலுவலகங்கள் ஆகிய இடங்களில் மேற்கொள்ளவுள்ளோம் என்று கூறினார்.

இதேவேளை - இதுவரை எந்த அரசதுறைகளிலும் வேலைவாய்ப்பைப்பெற்றுக்கொள்ளாத பட்டதாரிகள் சகலரையும் சங்கத்தில் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.இளைஞர் விவகார அமைச்சு, சுதந்திர இலங்கைப் பட்டதாரிகள் சங்க, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு வேலையற்ற பட்டதாரிகள் விவரங்களைச் சங்கத்தின் ஊடாக நேரடியாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் இலக்கம் 110, செம்மணி வீதி, நல்லூர் (யாழ்.கல்வி வலயம் முன்பாக) என்ற முகவரியிலுள்ள சங்கத்தின் தற்காலிக அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

# வயல்களில் தண்டுத்தத்தி தாக்கம்: கட்டுப்படுத்தும் வழிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

தென்மராட்சிப் பிரதேச வயல்களில் ஏற்பட்டுள்ள கபில நிறத் தண்டுத் தத்தியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழியை சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் விஜயகுமார் விளக்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு அதை அண்டிய பிரதேசங்களில் கபிலநிறத் தண்டுத்தத்தியின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பூச்சி வயலில் இருப்பதனை அதன் கவசங்கள் நீரில் மிதப்பதைக் கொண்டும் பயிரை விலக்கிப் பார்க்கும் போது நீர் மட்டத்தின்மேல் பயிரின் அடிப்பகுதியில் கூட்டமாக இருப்பதைக் கொண்டும் அடையாளம் காணலாம். இப்பூச்சிகளால் பயிர்கள் அதிகசேதம் எனில் பயிர்கள் தொட்டமாக எரிந்து காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த இமிடா குளோயிரிட் (அட்மயர்) நாசினி 7 மி.லீற்ற ருக்கு 16 லீற்றர் தண்ணீர் என்ற வீதத்தில் ஏக் கருக்கு 72 மி.லீற்றர் விசிறலாம். அல்லது பிப் ரொனிஸ் (றீஜன்ற்) நாசினி 56 மி.லீற்றருக்கு 16 லீற்றர் தண்ணீர் என்ற வீதத்தில் ஏக்கருக்கு 560 மி.லீற்றர் விசிறலாம். அல்லது எனறோ பென்புறொக்ஸ் (றிபோன்) நாசினி 23 மி.லீற்ற ருக்கு 16 லீற்றர் தண்ணீர் என்ற வீதத்தில் ஏக்கருக்கு 200 மி.லீற்றர் விசிறலாம்.

இந்த நாசினிக் கரைசல்களில் ஒன்றை பயிரின் அடிப்பகுதியில் படத்தக்கவாறு விசுறுதல் வேண்டும். இவ்வாறு விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார். மேலதிக விவரங்களை தன்னுடன் தொடர்பு கொண்டும் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (ஓ)

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு .

கொழும்பு, டிசெ.17

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைச் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தால் தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை பணிப்பாளர் கே.என்.ஜீவான்ஜீன் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜுலியன் வில்சன் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.

கூட்டமைப்பின் செயலாளர் இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ,செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். இதுவரைகாலம் சிங்கள அரசுகளும், சிங்கள அரசியற் கட்சிகளும், தமிழர்களுக்கான உரிமைகளை வழங்க மறுத்திருப்பதை தமிழ் எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினர்.

புதிய ஜனாதிபதி இப்போதைய நிலைமையை உணர்ந்து அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க - ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். அதற்குரிய அழுத்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் கொடுக்க வேண்டுமெனக் கோரிய தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அதற்கான வாய்ப்பு இல்லையேல் தமிழர்கள் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லையென்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். (எ-க)

## நீரிழிவு பற்றிய கருத்தரங்கும் விழிப்புணர்வு நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,டிசெ.17

நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் இலவசக் கருத்தரங்கும் இந்நோயிலிருந்து பாதுகாப்பதும் தொடர்பான நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில், யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் நோய் பற்றிய விளக்கங்களை அளிக்கவுள்ளதுடன், இந்த நோய் தொடர்பான சந்தேகங்களுக்கும் விடை அளிக்கவுள்ளனர்.

எனவே, இந்த நோயினால் பீடிக்கப்பட்டோர் மட்டுமன்றி, ஏனையவர்களும் இந்த நிகழ்வில் கலந்து பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு வெளியிடப்படும் நூல் இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-204)

### புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் அடுத்துவரும் நாள்களில் பேச்சு

# தமிழ்க் கட்சிகள், அமைப்புகளை ஒன்றிணைத்து தனிச்சின்னத்தில் இ.தொ.கா. இனிப்போட்டியிடும்

### ஆறுமுகன் தொண்டமான் எம்.பி.அறிவிப்பு

தலவாக்கலை, டிசெ.17

''எதிர்வரும் தேர்தலில் தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் ஆகியவற்றுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடும்''

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொட்டகலை காங்கிரஸ் தொழில் நிறுவன வளவில் நடைபெற்ற கூட்டத்தில்பேசும்போதே அவர்மேற்கண்டவாறு கூறினார். பெருந்தொகையான தலைவர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட மேற்படிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமது ஒன்றுபட்ட சக்தியை இந்திய வம்சாவளி மக்கள் வெளிப்படுத்தி விட்டனர். அதனைச் சகித்துக் கொள்ள முடியாதவர்கள் எமது சமூகத்தை ஒழிக்க நினைக்கின்றனர். அது முடியாத காரியம்.

இன்று சனிக்கிழமை வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும், திங்கட்கிழமை தமிழ்க் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களையும்சந்திக்கவுள்ளேன். அதேவேளை, மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணித்தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளேன். எல்லாக் கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்துவோம். நமது சக்தியை வெளிப்படுத்தும் தருணம் இது. ஒன்றுபட்ட சக்தியை வெளிப்படுத்துவதன் மூலம் நமது சமூகத்தின் பலத்தைத் தெரிவிக்க வேண்டும். அதன்பின் நம்மை யாரும் அசைக்க முடியாது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க பணிகளில் முக்கிய கவனம் செலுத்தும். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கும். குறிப்பாக கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு செய்யவேண்டியவற்றைச் செய்வதற்கு வற்புறுத்துவோம். அவ்வாறு செய்யாதவிடத்து அவர்களுக்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுப்போம்.

நான் தமிழகம் சென்றிருந்தபோது, இங்கு என்ன நடந்ததென்பது உங்களுக்குத் தெரியும். தேர்தலுக்கு முன்பே கட்சி மாறுவதற்காக கைமாறல்கள் நடைபெற்று முடிந்து விட்டன. தேர்தலின் போது எமது முன்னிலையில் இ.தொ.காவுக்கு உழைப்பவர்களாகவும், பின்புறம் மற்றவர்களுக்கு வேலை செய்பவர்களாகவும் இருந்தார்கள். இதையெல்லாம் நான் அறிவேன். எனினும் மேலும் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காகப் பேசாமல் இருந்தேன். கடந்த 13ஆம் திகதி 3 எம்.பி.க்களும் தனித்தனியாகப் பேசுவோம் என்று கூறினர். ஆனால், நானோ ஒன்றாகவே பேசுவோம் என்றேன். பின்னர் காங்கிரஸ் காரியாலயத்திற்கு வந்தனர். எல்லோரும் தாங்கள் கட்சியைவிட்டு விலகவில்லை என்றனர்.

ஜெகதீஸ்வரனும், புத்திரசிகாமணியும் தாங்கள் தொடர்ந்து இ.தொ.காவிலேயே இருப்பதாகக் கூறியதோடு அதனை உறுதிபடுத்தி பத்திரிகைகள், ஊடகங்களுக்குச் செய்திகளையும் அனுப்பினர். ஆனால், வடிவேல் சுரேஷ் தனக்கு பிரஷ்ஷர், வருத்தம், நெஞ்சு நோ, அது - இது என்று கூறிவிட்டுச் சென்றார். அவ்வளவுதான். பின் என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியும்.

எமது சமூகம் ஒன்றுபட்டிருக்கின்றது. அதன் வெற்றியைக் கடந்த ஜனாதிபதி தேர்தலில் நிரூபித்து விட்டார்கள். இந்தச் சமூக ஒற்றுமையைபொறுக்க முடியாதவர்கள் எம்மை ஒழிக்க முனைகிறார்கள்.



எதிர்காலத்தில் எமது செயற்பாடுகள் சமூக அடிப்படையில் இடம்பெறும். இதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு,மலையகமக்கள்முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி போன்ற அமைப்புகளுடன் பேச்சுகள் நடத்தவிருக்கிறேன் - என்றார். (சு-294)

# ஒற்றையாட்சி முறையின் கீழேயே தீர்வு என்ற பிடிவாதத்தை மஹிந்த அரசு கைவிட வேண்டும்

### 'தினமணி' நாளிதழ் ஆசிரியத் தலையங்கத்தில் வலியுறுத்து

சென்னை, டிசெ.17

மஹிந்த ராஜபக்ஷ அரசு, ஒற்றையாட்சி முறையிலேயே தீர்வு என்ற தனது பிடிவாதத்தைக் கைவிட்டு கூட்டாட்சி (சமஷ்டி) முறையில் தீர்வு காண இணங்க வேண்டும்.

- இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் தமிழ் நாளிதழான 'தினமணி' நேற்று முன்தினம் தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்திருக்கின்றது. 'நெகிழ்வான புதிய போக்கு' என்ற தலைப்பில் வெளியான அந்தத் தலையங்கத்தின் முழுவிவரம் வருமாறு:-

சிங்களப் பேரினவாத சக்திகளுடன் கூட்டணி அமைத்து அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று ராஜபக்ஷ பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு, புலிகளுக்கும், அரசுக்கும் இடையே உறவுகள் சீர்கேடு அடையும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்தன. ஆனால், அதற்கு நேர்மாறாக இருதரப்புமே - நிதானத்துடனும் நெகிழ்வான முறையிலும் நடந்து காட்டி ஒருவித ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.


இதற்குச் சில உதாரணங்கள்:-

புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே சமரசத் துதராக நோர்வே 1990 இலிருந்து அபூர்வ பாத்திரத்தைத் தாங்கி வருவதற்கு பேரினவாத சக்திகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கின்றன. என்ற போதிலும் அதிபர் ராஜபக்ஷ - சமரசத்துதுப்பொறுப்பைத் தொடர்ந்து ஏற்குமாறு நோர்வே அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அடுத்து புலிகளின் மற்றொரு கோரிக்கைக்கும் அவர் சம்மதம் தெரிவித்திருக்கிறார். போர் நிறுத்த உடன்படிக்கை செயல்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான இரு தரப்புப் பேச்சுகளை கொழும்பில்தான் நடத்த வேண்டும் என இவ்வளவு காலம் அரசுத் தரப்பு வற்புறுத்திவந்தது. ஆனால், புலிகளோ அதற்கு இணங்கவில்லை. அப்பேச்சுகள் ஒன்று ஈழத்தில் நடைபெறவேண்டும் அல்லது வெளிநாடுகளில் நடைபெறவேண்டும் என்று புலிகள் கோரி வந்தனர். இந்நிலையில் அண்மையில் கொழும்புக்கு வந்து ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய ஜப்பானின் சிறப்புத் தூதர் அப்பேச்சுகளை ஜப்பானில் வைத்துக் கொள்ளலாம் என்று கூறிய யோசனைக்கு அதிபர் இணங்கியிருக்கிறார். நோர்வே நாட்டுக்கு அடுத்தபடியாக - இலங்கையில் இப்பிரச்சினைத் [illegible] வில் தனி அக்கறை காட்டிவரும் நாடு - ஜப்பானே. அதே சமயத்தில், புலிகள் தரப்பும் நெகிழ்வான முறையில் நடந்துகாட்ட முன்வந்திருக்கிறது. யாழ்ப்பாண வட்டாரத்தில் - இலங்கை இராணுவ வீரர்கள் சம்பந்தப்பட்ட வன்முறைச் செயல்களையொட்டி மீண்டும் போர் மூளுமோ என்ற அச்சம் ஈழத்தமிழரிடையே ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய போர் அபாயத்தைத் தவிர்க்க, அமைதிப்பேச்சுகளைத் தொடங்க இலங்கை அரசு முன்வரவேண்டுமென்று புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆனால், பேரினவாத சக்திகளின் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு ஒருமுக ஆட்சிமுறையின் கீழேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அதிபரின் புதிய [illegible]லைப்பாட்டை புலிகள் ஏற்க மறக்கிறார்கள். நியாயமாகக் கூறுவதென்றால் இத்தகைய நிபந்தனையை ராஜபக்ஷ விதிப்பது முறையாகாது. ஏனெனில், இப்பொழுதும் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலான அதிபரே. ஈழப்பிரச்சினையில் இதுவரை அக்கட்சியின் அணுகுமுறை - கூட்டாட்சி அடிப்படையிலேயே ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதாக இருந்து வந்திருக்கிறது. அப்படியிருக்க, பேரினவாத சக்திகளின் குரலில் அதிபர் பேசுவது முறையாகாது.

அதுமட்டுமல்ல. ஈழப் பிரச்சினையில் இறுக்கம் ஏற்படவே இப்போக்கு வழிசெய்யும்.

அத்தோடு ராஜபக்ஷவின் இப் புதிய நிலைப்பாடு இந்தியாவுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தக் கூடியது. ஏனெனில் 'ஒன்றுபட்ட இலங்கைக்கு ஊறு ஏற்படாத வகையில் கூட்டாட்சி அமைப்பின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். என்பதே வாஜ்பாய் அரசு முதல் தற்போதைய மன்மோகன் சிங் அரசு வரையிலான இந்தியாவின் திட்டவட்டமான கொள்கையாகும். கூட்டாட்சி முறை அடிப்படையை இலங்கை அரசு ஏற்றாலொழிய - இலங்கைத் தமிழருக்கு சமத்துவக் குடியுரிமை, மொழி மற்றும் கலாசாரப் பாதுகாப்பு உரிமை, வாழ்வுரிமை போன்றவை வழங்கப்படுவதற்கு இடமே இருக்க வழியில்லை. எனவே ராஜபக்ஷ அரசு இப்புதிய பிடிவாதப் போக்கை சரிசெய்[illegible]து நல்லது. (எ-க)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும்
## "அட்சயசுரபி" அன்னதான மண்டபத்தின் ஓராண்டு பூர்த்தியும்



மலர்வு
17.12.1945
உதிர்வு
17.12.2003



அமரர் பொன்னுத்துரை ஐயாத்துரை(துரைசிங்கம்)
(சீமெந்து கூட்டுத்தாபன சிறாப்பர்)

17.12.2003 அமரத்துவமடைந்த அமரர் பொன்னுத்துரை ஐயாத்துரை (துரைசிங்கம்) அவர்களின் இரண்டாம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக யாழ்.நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய முன்றலில் அமைக்கப்பெற்றுள்ளதும் ஓராண்டு பூர்த்தி அடைந் துள்ளதுமான 'அட்சயசுரபி' அன்னதான மண்டபத்தில் 17.12.2005 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அவரின் ஆத்மசாந்திப் அடைய பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

315, ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம். (44166) (39-16-19-42)

திருமதி யோகம்மா துரைசிங்கம் (மனைவி),
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் - 2006
## குத்தகைக்கு விடுவதற்கான
# மீள்கேள்வி அறிவித்தல்

கீழ்க் காணப்படும் இறைச்சிக்கடைகள், சந்தைகள் என்பவற்றுக்கான 01.01.2006-31.12.2006 ஆம் திகதி வரையான ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

படிவக் கட்டணம் - ரூ.300/- (வற் வரி நீங்கலாக)
கேள்வி விண்ணப்ப முடிவு திகதி: - 27.12.2005 ந.ப.12 மணி
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித் திகதி: - 27.12.2005 பி.ப. 2 மணி
கேள்வி திறக்கப்படும் நேரம்: - 27.12.2005 பி.ப. 3 மணி

| | | மீளளிக்கக் கூடிய பிணைப்பணம் | சபையால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **சந்தைகள்:** | | | |
| பண்ணை மீன் சந்தை | | 10,000/= | 1,564,865/= |
| பெரியகடை மரக்கறிச் சந்தை | | 10,000/= | 530,535/= |
| குருநகர் சந்தை | | 10,000/= | 865,550/= |
| செங்குந்தாச் சந்தை | | 10,000/= | 432,940/= |
| பாசையூர் சந்தை | | 2,500/= | 39,500/= |
| வாகனத்தரிப்பிட அறவீடு | | 5,000/= | 500,000/= |
| (படிவக் கட்டணம் ரூ.500/=, 75/= வற்வரி) | | | |
| **இறைச்சிக்கடைகள்:** | | | |
| செங்குந்தாஆட்டிறைச்சிக்கடை | இல.1 | 2,500/= | 108,400/= |
| செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/= | 128,050/= |
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | | 2,500/= | 40,400/= |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.1 | 2,500/= | 162,000/= |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/= | 113,000/= |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.4 | 2,500/= | 60,000/= |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.5 | 2,500/= | 40,000/= |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.6 | 2,500/= | 25,000/= |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.10 | 2,500/= | 6,800/= |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.11 | 1,000/= | 3,900/= |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1,000/= | 3,900/= |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.7 | 5,000/= | 80,600/= |
| பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/= | 111,700/= |
| நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | | 5,000/= | 183,000/= |

மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சி.வி.கே.சிவஞானம்,**
**ஆணையாளர்.**
**யாழ்ப்பாணம்**

(சி/46808)(42-16-19)

## கண்ணீர்க் காணிக்கை



யா/மீசாலை வீரசிங்கம்
ம.வி.முன்னாள் அதிபர்
திருவாளர் அ.பொ.செல்லையா
அவர்கள் அமரராகிய செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அன்னார் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக செய்த செயற்பாடுகளையும் எமது பிரதேசத்திற்கும் கல்விக்கும் ஆற்றிய சேவைகளையும் நினைவு கூர்ந்து அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் ஆறுதல் கூறி அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்.,
மீசாலை. (44175)(42-16-19)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர்..


Singapore Quality Class — FTMS

**Study In Singapore**

Under Graduate Degree Programs
(IT, BBA, Accounting, Com.Eng. Com.Games)

Professional Courses: ACCA, CAT

இக்கல்லூரிப் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்திப்பதற்கு:-

இடம்: Jaffna M.P.C.S. Hall
காலம்:- 18 th Sunday Evening (3.00-6.00)

Minimum Qualification: GCE O/L

மேலதிக விவரங்களுக்கு:-

077 3256575
077 3164320

(C/46811)(42)



## அன்பான இளைஞர், யுவதிகளே!

அன்னிய நாட்டு வேலைவாய்ப்பினை நம்பிப் பணத்தையும் காலத்தையும் வீணாக்காது சொந்த மண்ணில் சுயதொழில் செய்யவும் (Hotel, Resturent) போன்ற துறைகளில் தொழில் கல்வி பெறவும் வெளிநாட்டில் வாழும் உறவுகளின் உதவியுடன் உதவ விரும்புகின்றோம்.

**PIZZA BACKARI**

Pizza Backari ஒன்றை உருவாக்க விரும்பினால் பயிற்சி, ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் offen உட்பட தேவையான சாதனங்கள், தளபாடங்கள் நீண்டகால கடன் அடிப்படையில் வழங்குவோம்.

Hotal Management & Tourisian போன்ற துறைகளில் சுவிஸ் லாந்தில் பட்டப்படிப்பு படிக்க விரும்புபவர்க்கு ஆலோசனை வழங்குவோம்.

★ தேவை:

மின்சார தொழில்நுட்ப பட்டப்படிப்பு படித்தவர் தேவைப் படுகின்றார்.

மேலதிக விவரங்களுக்கு:

**AYINGARAN MULTI BUSSINES**
**Palaly Road,**
**Kondavil.**

T.P.: 021 222 7830
0777 888035 Mr. குருபரன்
0041 (0) 762215026 Mr.லோகேஸ்வரன் (சுவிஸ்).

(44186)(42.16.19)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 08 - 02 - 1939



மறைவு 17 - 11 - 2005

அமரர் ஐயம்பிள்ளை விநாயகமூர்த்தி

அன்பு எனும் நீரூற்றி
அரவணைத்த எம்தந்தையே!
ஆறாதையா உங்கள் பிரிவு
இங்கிருந்து வேண்டுகிறோம் நின்
ஆத்ம சாந்திக்காய்!

இன்று (17.12.2005) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"பராசக்தி அச்சகம்",
81, கே.கே.எஸ்.வீதி,
கோக்குவில் சந்தி. (44183)(42-16-19)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஐந்து நாணயக்குற்றிகள் 13 ஆம் திகதி முதல் பாவனையில்!

கொழும்பு,டிசெ.17

மத்திய வங்கி கடந்த 14ஆம் திகதி முதல் புதிய நாணயக்குற்றிகளைப் பாவனையில் விட்டுள்ளது.

ஐந்துரூபாய், இரண்டு ரூபாய், ஒரு ரூபாய், 50 சதம் மற்றும் 25 சத புதிய நாணயக் குற்றிகளின் தொகுதி ஒன்றை உத்தியோக பூர்வமாகப் பாவனைக்கு அனுமதிக்கும் நிகழ்வொன்று கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் மத்திய வங்கியின் தலைவரான சுனில் மெண்டிஸ், புதிய நாணயக் குற்றிகளின் தொகுதி ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

ஐந்துரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் புதிய நாணயக் குற்றிகள் தற்போது பாவனையில் உள்ள நாணயங்களின் உருவ ஒற்றுமையைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் 2005ஆம் ஆண்டு என்பது பொறிக்கப்பட்டுள்ளது. மற்றும் அவற்றின் நிறையும் குறைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஒரு ரூபாய், 50 சதம் மற்றும் 25 சத நாணயங்கள் தற்போதுள்ள நாணயங்கள் போன்று காணப்படுகின்ற போதிலும் அவற்றைவிட உருவத்தில் சிறியனவாக உள்ளதுடன் அவற்றின் நிறங்களும் மாறுபட்டுள்ளன. அத்துடன் நிறை குறைந்தனவாகவும் உள்ளன.

தற்போது பாவனையில் உள்ள நாணயங்களின் பெறுமதியைவிடவும் அவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள உலோகங்களின் பெறுமதி அதிகமாக உள்ளதால் உலோகங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் தயாரிப்புகளுக்கு நாணயங்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் முகமாகவே தற்போது உலோகக் கலவைகள் குறைக்கப்பட்டு புதிய நாணயக் குற்றிகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று சுனில் மெண்டிஸ் தெரிவித்தார். (எ-206)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
(C-43109)


## போதைப்பொருள் வழக்கு விசாரணைக்கு விரைவில் தனியான நீதிமன்றம்

கொழும்பு, டிசெ.17

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணைகளை மேற்கொள்வதற்கென தனியான நீதிமன்றம் ஒன்றை நிறுவுவது குறித்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கவனம் செலுத்தியுள்ளார்.

போதைப் பொருள் தொடர்பான வழக்கு விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது மற்றும் அந்த வழக்குகளை பிற்போடுவதால் குற்றவாளிகளுக்கு ஏற்படும் சாதகமான நிலைப்பாடு என்பனவற்றைத் தவிர்க்கும் முகமாகவே ஜனாதிபதி இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் - கூறப்பட்டது.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் ஏற்கனவே சட்ட ஆலோசனைப் பிரிவுகளுடன் ஜனாதிபதியால் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளது எனவும் இந்தத் தீர்மானத்தை விரைவில் நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தகவல் ஒன்று தெரிவித்தது.

(எ- 206)





அற்புதமான, அழகான அழைப்பிதழ்கள்...

அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்ட
ஆயிரக்கணக்கான தெரிவுகள்....



குறைந்த விலையில்

0094 021 222 6549
0777 737438
boasco@gmail.com



போஸ் காகிதாதியாளர்கள்
03 மருத்துவமனை வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


## நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு

இடம் : வீரசிங்கம் மண்டபம் (யாழ்ப்பாணம் கூட்டுறவுச்சபை, மண்டபம்)
இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை (18-12-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

நோயுள்ளோர் மட்டுமன்றி நோயற்றோர், மாணவர்கள், ஆர்வலர்கள் எத்தரப்பினராயினும் இந்த இலவச அறிவூட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெளியிடப்படும் நூலினையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் நோய் பற்றிய விளக்கங்களை அளிக்கவிருப்பதுடன், உங்கள் வினாக்களுக்கும் பதில்தரவுள்ளனர். உங்களுக்காகவே நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.

(44127)(26-19-16) -ஏற்பாட்டாளர்கள்.

## "அகல்" தனியார் பாதுகாப்புச் சேவை

(பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றது)

### WALK IN INTERVIEW

அரச நிறுவனங்களில், அரச சார்பற்ற நிறுவனங்களில் (NGO) தனியார் பாதுகாப்புச் சேவையில் உட[illegible]ாகச் சேவை புரிவதற்குப் பாதுகாப்பு உத்தியோக[illegible] தேவைப்படுகின்றனர்.

18-12-2005 முற்பகல் 11 மணிக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.
கல்வித்தகைமை: G.C.E.(O/L)
வயது: 22-45இற்குள்
உயரம் 5 அடி 5 அங்குலம்
கல்விச் சான்றிதழ், கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேரில் வரவும்.
சம்பளம்: 12 மணித்தியால சேவைக்கு ரூபா 250/-

1120, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (44172)(26.19.16)

து.ஜெயரட்ணம் J.P.
பணிப்பாளர்
தொலைபேசி:021 222 9670

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற விலை மதிப்பீட்டாளர்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் **(Chief Postmaster)** திலகவதி ஆகியோரின் புத்திரரும் ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சக்திவேல் **(Petrolshed** - உரிமையாளர்) திருமதி தங்கமலர் தம்பதிகளின் மருமகனும் பிரஷாந்தன், ஹேஷினி மற்றும் சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வவதியம்மா **(India)**, காலஞ்சென்ற அருணாச்சலம் **(Chief Post Master)**, விவேகானந்தன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி ), சர்வேஸ்வரி, இராமநாதன் **(U.S.A.)**, பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலன் **(U.S.A.)**, கணநாதன் **(France)** ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17-12-2005) சனிக்கிழமை முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (18-12-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

No.14A, RAMAKRISHNA AVENUE,
RAMAKRISHNA ROAD,
Colombo - 06.
T.P.: 011 2361962
Mobitel: 077 6024970

தகவல்:
ச.பிரஷாந்தன் (மகன்).
(44161)(26-19-16)


யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக் காட்சியகம்
கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்



Style Park
Perfect Collection
ஸ்ரைல் பார்க்



முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த
விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத் தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்
(சி/46807)
No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383
இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# வேலையற்றோருக்கான திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிகளில் அநேகருக்கு உரிய பணி இல்லையாம்

கொழும்பு, டிசெ.17

வேலை வாய்ப்பற்ற சுமார் 41 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் வேலை வழங்குவது தொடர்பாக அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டம் சுமார் ஓர் ஆண்டு காலத்தை எட்டவுள்ளது. ஆயினும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளில் சுமார் அறுபது சதவீதமானவர்கள் அரச நிறுவனங்களில் எதுவிதமான பணிகளுமின்றி வெறுமனே காலம் கடத்தி வருகின்றார்கள் என்று நிதியமைச்சின் முகாமைத்துவப்பிரிவைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் ராவய சிங்களப் பத்திரிகைக்குத்கருத்துத் தெரிவித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுள் சுமார் 80 சதவீதமானோருக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. ஆனால் சுமார் 20சதவீதமானோருக்கு இன்னமும் பயிற்சிக்காலத்தில் வழங்கப்பட்டுள்ள 6ஆயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக கிடைத்துவருவதாகவும் அந்த அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அபிவிருத்தி ஒத்துழைப்பு உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு உரிய பணிகள் தொடப்பாக திட்டமிட்ட செயற்பாடுகள் எதுவும் இல்லாது உள்ளது. அவர்கள் பணி களை மேற்கொள்ளும் வகையில் வசதி வாய்ப்புக்கள் உருவாக்கப்படாமை காரணமாக வெறுமனே அவர்கள் காலத்தை கடத்தும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

தேசியப் பாடசாலைகளில் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் ஆசிய நியமணங்கள் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு அப்பாடசாலைகளில் ஆசிரியப்பணி வழங்கப் படாது அவர்கள் வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அப்பாடசாலைகளில் ஏற்கனவே மேலதிகமாக ஆசிரியர்கள் இருப்பதே இந்நிலைப்பாட்டுக்குக் காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கருத்து வழங்கியுள்ள பிரதிக் கல்வியமைச்சரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இத்தகைய நடைமுறைச் சிக்கல் உருவாகியுள்ளது உண்மை யெனவும் இவ்வாண்டு இறுதிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள 41ஆயிரம் பட்டதாரிகளுக்கும் உரிய பணிகள் வழங்கப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமென்று 'ராவய' சிங்களப்பத்திரிகைக்குத் தகவல் வழங்கியுள்ளார். (ஒ-206)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில் 04 . 02 . 1950



விண்ணின் மடியில் 26 . 12 . 1996

### திருமதி கந்தசாமி இராசம்மா

(திதி: பிரதமை 17.12.2005)

மனதில் உதித்த நிலா
நினைவில் நின்ற நிலா
தொலைவில் போனதென்ன
ஏழை நெஞ்சம் அழுவதென்ன

வயிற்றில் எமைச்சுமந்த நிலா
வளர்த்தெடுக்கத் துயர்பட்ட நிலா
வட்டில் சுமந்த நிலா
வண்ணத் தமிழ் வாயமுதம் தந்த நிலா
தொட்டில் சுகம் கண்டநிலா
தூய உள்ளம் கொண்ட நிலா
எட்டி எட்டிப் போனதென்ன?
இதயக் கூட்டில் குருதி வடிவதென்ன?
அந்த நிலா எங்கள் அன்னை நிலா
ஒன்பது ஆண்டுகள் கழிந்ததென்ன?
எண்பது ஆண்டுகள் கழிந்தாலும் அம்மா
எங்கள் இதயக்கோயில் தீபம் நீயல்லவா
எல்லையது இழப்பால் ஏங்கித்
துயருறும் பிள்ளைகளும் அப்பாவும்

"ரஜனி மகால்"
சமராபகு, வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்.

(43998)(51)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

### கபிசன்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திரு திருமதி இராசரத்தினம் ரஜனி தம்பதியரின் அருந்தவப்புதல்வன் கபிசன்

அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (17.12.2005) சனிக் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அத்தைமார், பெரியப்பாமார், மாமாமார், இத்தாலியில் வசிக்கும் பெரியம்மா, அண்ணாரஞ்சித், மீசாலையில் வசிக்கும் பெரியப்பா வசந்தகுமார் குடும்பம், அன்பு அக்காமார், மதுசாலினி, கபிசாலினி மற்றும் உற்றார், உறவினர், மீசாலை நண்பர்கள் அனைவரும் சித்திர வேலாயுதர் முருகன் அருள் கொண்டு பல்கலையும்பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்

அப்பா
இராசரத்தினம்







## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 03 - 1940



மறைவு 17 - 12 - 2002

### திருமதி கதிர்காமு தங்கம்

நிலையில்லாத உலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாது- நாம்
நீந்துகிறோம் தினம் கண்ணீரில்

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி (பவலி).

(43365)(51)

கணவன், பிள்ளைகள்,
சகோதரங்கள்.

## பெரியவிளானில் நூலகம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்.டிசெ.17

பெரியவிளான் பகுதியில் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்துவதற்கு நூலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துதருமாறு வலி. மேற்கு பிரதேச செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம் யாழ். ஜிரிசற் தொண்டு நிறுவனத்தை கோரியுள்ளார். பெரியவிளான் பகுதியில் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்துவதற்கு இரண்டு மாடிகளை கொண்டதாக நவீன வடிவிலான நூலகம் ஒன்று அமைப்பதற்கான மானிப்பாய் பிரதேச சபையின் திட்ட முன்மொழிவை முன் வைத்தே இந்த நிதி உதவிகோரப் பட்டுள்ளது.

(ஒ-185)

## பதினெட்டாவது ஆண்டு நினைவு தினம்

மலர்வு 12 . 09 . 1928



உதிர்வு 07 . 12 . 1987

### அமரர் வே.த. தணிகாசலம் (அதிபர்- குருமாமணி)

திதி: 17.12.2005

ஆசிரியத்துவத்தின் அணிகலனாய்
அதிபராக அறிவுரைகள் பல புகட்டி
சத்தியத்தின் வழி நின்று
சான்றோராக எமை வளர்த் தெடுத்து
சாதனைகள் பல படைத்து
சாலவும் பல கற்றுத் தேர்ந்து
குன்றாத சிகரம் என உயர்ந்து நின்று
குத்துவிளக்காக என்றும் சுடர்
விட்டெரிவீர்கள்.

உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"இராஜஸ்தலம்",
அல்வாய்.









## பானூஸ் சூறாவளியால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் வாழைகள் பலத்த சேதம்

நீர்வேலி.டிசெ.17

அண்மையில் வீசிய பானூஸ் சூறாவளியினால் நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், அச்செழுப் பகுதிகளிலுள்ள வாழைத் தோட்டங்க ளில் வாழைகள் முறிந்து பலத்த சேதமேற்பட் டது.

இதனால் இப்பகுதி வாழைச் செய்கையாளர் கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் புகையிலை உற்பத்தி யாளர்களால் நாட்டப்பட்ட புகையிலைக் கன்றுகளும் வெள்ளத்தால் அழிந்துள்ளன.

மேற்படி சூறாவளியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெரிதும் நஷ்டப்பட்டு ஈடுசெய்யமுடியாத நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

(ஒ-110)


புதுக்குடியிருப்பில் வீடொன்று


முல்லைத்தீவு தற்காலிக குடியிருப்பில் வெள்ளம்


புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குள் வெள்ளம்


உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் அவலம்..

சமீபத்தில் பெய்த மழையினால் முல்லைத்தீவில் ஏற்பட்ட சேதவிவரங்களில் சிலவற்றை மேலே காணலாம் படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்

# விசுவமடுப் பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

பரந்தன்,டிசெ.17

விசுவமடு பிரதேசத்தில் அடுத்த வருடம் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை விசுவமடு மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் விசுவமடு பிரதேசத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் அடுத்த வருடம் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், முல்லை மாவட்ட நீர்ப்பாசனப் பிரதித் திட்டப் பணிப்பாளர் கி.சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா உட்பட பலரும் கருத்துரைகளை வழங்கினர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா, முல்லை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி, கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர், பிரதித் திட்டப்பணிப்பாளர் சி.சிவஜெயந்தன், முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் முகுந்தன் உட்பட மாவட்டப் பொறுப்பாளர்கள்,பிரதேச பொறுப்பாளர்கள், கமக்கார அமைப்பினர், கிராம உத்தியோகத்தர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(த-6-352)

# சமூக சேவைத் தொண்டர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

புதுக்குடியிருப்பு,டிசெ.17

'வேள்ட் விஷன்' நிறுவனம் சமூக சேவையில் ஈடுபடும் தொண்டர்களை ஊக்குவிக்குமுகமாக 150 பேருக்குத் துவிச்சக்கரவண்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த முகாம்களிலும் உள்ளூர் கிராமங்களிலும் சமூக சேவையில் ஈடுபடும் தொண்டர்களுக்கே இவ்வாறு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அந்த நிறுவனத்தில் வைத்து துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் பல சமூக நிறுவனங்களில் சேவையாற்றுவோருக்கும் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன என்று 'வேள்ட்விஷன்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-6-353)

# புதியபுன்னைநீராவி கிராமத்தில் காணிப்பதிவு நடமாடும் சேவை

பரந்தன்,டிசெ.17

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள புதிய புன்னை நீராவி கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காணிப்பதிவு நடமாடும் சேவை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட காணி உதவி ஆணையாளர் சி.சிவசொருபநாதபிள்ளை தலைமையிலான குழுவினரும் தமிழீழ நிர்வாக சேவைப்பிரிவின் நடுவப்பணியகத்தைச் சேர்ந்த மா.ஞானசேகரம், கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவையைச் சேர்ந்த மோகன் ஆகியோரும் இணைந்து இந்த நடமாடும் சேவையை நடத்தினர்.

இதில் 140 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான காணிப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எஞ்சியவர்களுக்கு பிறிதொரு தினத்தில் பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் கிளிநொச்சி மாவட்ட செயலகக் காணிப்பகுதி அதிகாரிகள், கண்டாவளைப் பிரதேச செயலக காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், புன்னை நீராவி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் கமக்கார அமைப்பினரும் இணைந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர். (த-6-352)

# வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

முழங்காவில்,டிசெ.17

கந்தபுரம் - கோணாவில் வீதியை இணைக்கும் புதுப்பாலத்து வீதி மழை காலத்தில் உடைப்பெடுத்து சேதமடைந்துள்ளதால் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியின் இருபகுதிகளிலும் வயல் நிலங்கள் காணப்படுவதால் இது நீர்ப்பாசன வீதியாக உள்ளது.

இதனால், மழை காலங்களில் தண்ணீர் வயல் நிலங்களுக்குள் செல்வதற்கு வீதியின் பல்வேறு இடங்களிலும் உடைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, விவசாய நிலைங்களுக்கேற்ற வகையில் தற்போது வீதியில் உடைப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் பாலங்களை அமைத்து இந்த வீதியைத் திருத்தம் செய்து தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-323-203)

# விவசாயிகளுக்கு வினாடிவினாப்போட்டி

பரந்தன்,டிசெ.17

கனகராயன் குளம் மற்றும் நெடுங்கேணி ஆகிய பிரதேசங்களில் வேளாண் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வினாடி - வினாப் போட்டிகள் நடத்தப்பட்டன.

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களமும் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து கடந்த வாரம் இந்த வேளாண் வினாடி வினாப் போட்டிகளை நடத்தின.

கனகராயன் குளத்து விவசாயிகளுக்கான போட்டி ,விவசாயப் போதனாசிரியர் சரஸ்வதி தலைமையிலும் - நெடுங்கேணி விவசாயிகளுக்கான போட்டிகள் விவசாயப் போதனாசிரியர் சு.சிவதாஸ் தலைமையிலும் இடம்பெற்றன.

இப்போட்டிகளை வவுனியா மாவட்ட விவசாய உத்தியோகத்தர் த.கணேசலிங்கம், பாடவிதான உத்தியோகத்தர் வெ.மகேந்திரன் ஆகியோர் நடத்தினர்.

இந்த நிகழ்வுகளில் ஜினசேன கம்பனி சந்தைப்படுத்தும் முகாமையாளர் மஞ்சநாயக்க, வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முகாமையாளர் சி.புவனேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இறுதியில் வினாடி வினாப் போட்டிகளில் வெற்றியீட்டிய விவசாயிகளுக்கான பரிசில்களை வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் வே.விக்னேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார். (த-6-352)

# பொருண்மிய ஏற்பாட்டில் அடுத்த வருடம் வவுனியாவில் அபிவிருத்திப் பணிகள்

பரந்தன்,டிசெ.17

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வவுனியா மாவட்டத்தில் அடுத்த வருடம் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கனகராயன்குளம் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ராம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதுடன், அடுத்த வருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

வவுனியா மாவட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகளான உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஜெகநாதன், கால்நடை வைத்தியர் திருமதி ரமணி கருணாகரன், நீர்ப்பாசனத் திட்டப்பணிப்பாளர் அ.விமலசந்திரன், கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(த-6-352)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை

## முல்லை.மாவட்டச் செயலகம் மேற்கொள்கின்றது

புதுக்குடியிருப்பு,டிசெ.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் வாழும் குடும்பங்களுக்குச் சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகம் பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மேற்கொண்டுள்ளது.

அத்துடன், வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்பட்டு இறந்த இருவருக்கு உடனடி மரணக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அனைத்து வீதிகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அவற்றைச் செப்பனிட்டு மக்களின் போக்குவரத்துக்களைச் சீர்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-353)

# பொருண்மிய மதியுரையகத்தின் தையல் நிலையம் பூநகரியில்

பூநகரி,டிசெ.17

பூநகரிப் பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தால் நிறுவப்பட்ட தையல் பயிற்சி நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

'டனிடா' மற்றும் 'ஐ.எல்.ஓ' ஆகிய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சுமார் 11 லட்சத்து 57 ஆயிரம் ரூபா உதவியுடன் இக்கட்டடம் அமைக்கப்பட்டது.

இக்கட்டடத்திறப்பு விழா ஐ.எல்.ஓ நிறுவனத் திட்ட இணைப்பாளர் ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெற்றது. இதில் ஈகச்சுடரை கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியைப் பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஏற்றினார்.

தொடர்ந்து தையல்பயிற்சி நிலையத்திற்கான பெயர்பலகையைப் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அடுத்து கட்டடத்தை பூநகரி உதவி அரச அதிபர் ஸ்ரீஸ்கந்தராசா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தையல் பயிற்சியை திருமதி சுகந்தன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையைப் பூநகரி மாவட்ட இணைப்பாளர் மயூரனும் சிறப்புரைகளை பூநகரி பிரதேச உதவி அரச அதிபர், கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் ஆகியோரும் நிகழ்த்தினர். (த-6)

# கட்டாக்காலிக் கால்நடைகளின் உரிமையாளர்களால் தொல்லை!

வன்னிப் பகுதியெங்கும் கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் செய்தியாக அடிக்கடி 'வன்னிச் செய்திகள்' பகுதியில் படித்திருப்பீர்கள். வீதிகளில் விபத்தை ஏற்படுத்தி - வயல்களில் பயிர்களை அழிக்கும் இந்தக் கட்டாக்காலிகள் செய்யும் அட்டூழியங்கள்தான் எத்தனை.


(படம்: காண்டீபன், புளியங்குளம் செய்தியாளர்)

கட்டாக்காலி கால்நடைகளால் மக்கள் எத்தகைய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை இங்கு நீங்கள் படமாகக் காணலாம்.

வவுனியா வடக்கில் களகராயன் குளம் பகுதியில் உள்ள பிரதான வீதி ஒன்றின் நடுவே கூட்டமாக - குடும்பத்தோடு - உட்கார்ந்திருந்து ஒய்யாரமாகப் பொழுதைப் போக்குகின்றன இந்தக் கட்டாக்காலிகள்.

இதனால், மக்களின் போக்குவரத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் மக்களின் அசௌகரியங்களும் இந்த ஐந்தறிவு ஜீவன்களுக்குத் தெரியவே தெரியாது. இவைகளைக் கட்டாக்காலிகளாக அலையவிட்டு, அதன்மூலம் பிறருக்குத் தொல்லை கொடுக்கின்றோம் என்ற உண்மை இந்தக் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கும் புரியாதா? என்பதே மக்களின் கேள்வியாகும்.

(த-355)

## வடிசாலைக் கூரைகள் காற்றினால் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.17

குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை வீசிய 'பானூஸ்' சூறாவளியினால் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்குச் சொந்தமான வடிசாலைக் கட்டடக் கூரைகள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த வடிசாலைக்கட்டடத்தின் அனைத்துக் கூரைகளும் மரங்களும் காற்றினால் கிளம்பிப் பறந்துவிட்டன. இதனால் வடிசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கொத்தணியின் முகாமையாளர் க.சுதாகரன் தெரிவித்தார். (த-13)

## நிவாரணப் பொருள்கள் விநியோகம்

அரியாலை, டிசெ.17

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களை சங்கத்தின் கிளைகள் ஊடாக விநியோகித்து வருகின்றது.

இந்த மூன்று மாதங்களுக்கு உரிய நிவாரணத்தை இன்று சனிக்கிழமைக்கு முன்பாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேசமயம் சமுர்த்தி முத்திரைக்கான உலர் உணவுப் பொருள்கள் விநியோகத்தையும் சங்கக் கிளைகள் ஊடாக ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## சுயதொழில்முயற்சிக்கு இலங்கைவங்கி கடன்

காரைநகர், டிசெ.17

காரைநகர் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு காரைநகர் இலங்கை வங்கிக் கிளையினால் சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

காரைநகரில் சுயதொழில் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரை மிகக்குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் முதற்கட்டமாக காரைநகர் மருதபுரம், வேரப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 37 பேருக்கு சுமார் 10 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் தா.குகநேசன் தெரிவித்தார்.

காரைநகர் இலங்கை வங்கிக் கிளையில் தற்போதே முதல்முறையாக கடன்வழங்கப்பட்டு வருவதுடன் கடந்த மாதம் முதல் தங்க நகை அடைவு சேவையும்ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-73)

## பாதிக்கப்பட்டோரின் விவரம் திரட்டல்

நவாலி, டிசெ.17

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரினால் நிவாரண உதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-100)

## குடாரப்பு மக்களுக்கு நிரந்தர வீடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.17

கடந்த வருடம் இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது வீடுகளை இழந்த மருதங்கேணி உதவி அரசஅதிபர் பிரிவில் உள்ள குடாரப்பு கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு வேள்ட்விஷன், நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இந்த வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அந்த நிறுவனத்தின் அதிகாரி வி.கதிரமலை தெரிவித்தார். (த-190)

## கணனி அன்பளிப்பு

வடமராட்சி, டிசெ.17

பருத்தித்துறை நகரசபை அலுவலகப் பணிகளுக்கென கியூமெடிக்கா நிறுவனம் கணனி இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அருட்திரு சாம் இராஜசூரியர் கணனியை பருத்தித்துறை நகரசபையின் செயலாளர் திருமதி கே.திருச்செல்வநாயத்திடம் அண்மையில் கையளித்தார். (எ-173)


**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
(சி/46667) கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.


## வீட்டு மின்னிணைப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்


இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடத்தும் வீட்டு மின்னிணைப்பு, அலுமினியம் பொருத்துதல், மேசன் வேலை ஆகிய தொழிற் பயிற்சிகளைக் வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது. இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை கற்றிருப்பதுடன் 18 வயதுக்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள விரும்புவோர் இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் (பிரதேச செயலகம் முன்பாக), சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என நிலையத்தின் பொறுப்பதிபதிகாரி வே.ஸ்ரீ குகன் அறிவித்துள்ளார்.

பயிற்சி வகுப்புகள் யாவும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகும். (எ-100)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 04 - 1955 | உதிர்வு 28 - 12 - 2004



**திருமதி குமாரமூர்த்தி லீலாவதி**

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் இருப்பிடமாய்-எம்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் நினைவில் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. — அன்புக் கணவர், பிள்ளைகள்.

(44133)(26-21-15-45)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 - 07 - 1927 | இறப்பு 17 - 11 - 2005



**அமரர் கார்த்தியேசு கந்தையா**

எம்மை அன்புடனும் பண்புடனும் வளர்த்து ஆளாக்கி வாழ்வு தந்த எங்கள் அப்பாவுக்கு எமது 31ஆம் நாள் நினைவஞ்சலியை ஆராதிக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்கு எங்களது பிரார்த்தனைகள் எப்பொழுதும் நிலைத்திருக்கும்.

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். — குடும்பத்தினர்.

(44153)(26-21-15-45)

**உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய ஆதரவில் உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்**

We Serve

- நீரிழிவுப் பரிசோதனையும், இரத்தப் பரிசோதனையும்
- இலவச மூக்குக் கண்ணாடி பரிசோதித்து வழங்கலும்
- பார்வை அற்றவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு வழங்கலும்

காலம்: நாளை(18.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை

இடம்: கணேசா சனசமூக நிலைய மண்டபம் கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு

கண்பரிசோதனை: லயன் S.M. பெர்னான்டோ MJF

வைத்திய நிபுணர்களும், யாழ்.பல்கலைக்கழக வைத்திய மாணவர்களும் பரிசோதனை நடத்துவார்கள்.

குறிப்பு: இரத்தப் பரிசோதனை செய்பவர்கள் சாப்பிடாமல் வரவும். ஆஸ்மா நோயாளர்களும் பரிசோதிக்கப்படுவர்.

*நோயாளர்களே வருக! பயன் பெறுக!*

லயன்.அ.ஈஸ்வரநாதன், *தலைவர்* — வீ.புஸ்பநாதன் — லயன் ச.ஏகாம்பரநாதன் J.P., *செயலாளர்*

(44124) *சனசமூக நிலையத்தின் சார்பில்* (21.45-15)


**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**
**டோகா, கட்டார், டுபாய்**
பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
களஞ்சியப் பாதுகாவலர் (STORE KEEPER)
சமையல் செய்பவர் (COOK ASIAN / SOUTH INDIAN)
இலக்ரீசியன் (HOUSE ELECTRICANS)
துப்புரவு செய்பவர்கள் (CLEANING LABOURERS)
**மலேசியாவில் வேலைவாய்ப்பு**
மரத்தளபாடம் செய்பவர்கள்
உதிரிப்பாக உற்பத்தியாளர்கள்
உற்பத்தி இயக்குநர்கள்
துப்புரவுத் தொழிலாளர்கள்
தையல் வேலை செய்பவர்கள்
மேற் குறிப்பிட்ட நாடுகளுக்க குறுகிய காலத்தில் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
**RAINBOW TRAVELS & TOURS**
32-1 / 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237 , 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)
குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.



**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422
யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் மூன்று நாள் முழுநேர பயிற்சி நெறி
**Mobile Phone Repairing Course**

*Course Condense:-*
- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phoneல் காணப்படும் I.Cக்கள்)
- Spares பழுதினால் Phoneல் ஏற்படும் பழுதுகள்
- I.Cகள் பழுதடைந்தால் Phoneல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

ஒரு பிரிவில் 20பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்
ஆரம்பம்: 23/12/2005 08.30-04.30

**Hard Ware பயிற்சி**
- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Chareg ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

**Software பயிற்சிகள்**
- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

## நீத்தார் நயப்புரை

# சமூகப் பற்றுமிக்க பொதுப் பணியாளர்



சமூக சமத்துவம் அல்லது இன சமத்துவம் மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தை அல்லது ஒரு இனத்தைச் சேர்ந்த ஒருவர் எவ்வளவு தான் சுயவளர்ச்சி பெற்றாலும் அதன் சமூகப் பெறுமானமானது அவன் சார்ந்த அத்தகைய சமூகத்தினதும் இனத்தினதும் சமூக மதிப்பின் அளவிற்குக் கீழ்நோக்கப்படும் என்ற வாழ்வியல் யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்ட ஒருவர் தான் வி.சி. சின்னத்தம்பி.

இவர் 18.11.2005 அன்று 87ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை இல்லற வாழ்விடமாகவும் கொண்டவர். வி.சி.சி. அவர்கள் சமூக, கல்வி, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பச் சூழலிலிருந்து படிப்படியாக வளர்ந்து ஒரு சிறந்த குடும்பத் தலைவராகவும் ஒரு சமூக முன்னோடித் தலைவராகவும் பெருமைபெற்றவர். சுயநம்பிக்கை, சுயபலம், சுயமுயற்சி, விடாமுயற்சி, அஞ்சாமை ஆகிய பண்புகளை மூலதனமாகக் கொண்டு முன்னணிக்கு வந் தவர். இவர் குடும்பப்பற்று, சமூகப்பற்று, தமிழ்ப்பற்றுடன் பயனுள்ள மனிதராக வாழ்ந்துள்ளார்.

1955.09.12ஆம் திகதி மாவிட்டபுரத்தில் மாவை பாரதி வாசிகசாலை என்ற பெயரோடு தாபிக்கப்பட்டுப் பின்னர் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர்மாற்றம் பெற்ற மன்றத்தின் ஒரு முன்னோடியாக இருந்தவர். ஆரம்பம் முதல் பல ஆண்டுகாலமாக அதன் செயலாளராகப் பதவி வகித்துச் செயல்துடிப்புடன் சேவையாற்றியுள்ளார். தனது பேச்சாற்றலாலும், எழுத்தாற்றலாலும், செயல்திறமையாலும் மன்றத்தின் சமூக, கல்வி, சமய, கலை, கலாசார மேம்பாட்டுப் பணிகளுக்குத் தொடர்ச்சியாகக் காத்திரமான முறையில் வி.சி.சி. பங்களித்துள்ளார்.

மன்றத்தின் சமூக சமத்துவப் போராட்டங்களில் இவர் துணிச்சலுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். தெல்லிப்பழைக் கிராம சபையில் 17ஆவது வட்டாரத் தேர்தல்களில் சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகக் குழுமியங்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையில் வெற்றி பெறுவதற்கு வி.சி.சி. இன் பங்களிப்பு சமூக வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும். இப்போராட்டத்தின் வெற்றிக்கு வி.சி.சி.இன் முக்கியத்துவத்தை உணர்ந்த சமூக சமத்துவத்திற்கு எதிரான சமூகக் குழுமியங்கள் வி.சி.சிக்கு எதிராக வன்முறைகளைப் பிரயோகித்தனர். இவரது தொழில் நிலையத்திற்கு தீ மூட்டப்பட்டது. இவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இவற்றையெல்லாம் அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்வுகொண்டு சாதனை படைத்துள்ளார்.

''தக்கார் தகவிலர் என்பது - அவரவர்
எச்சத்தாற் காணப்படும்'' என்னும் வள்ளுவப் பெருந்தகை வகுத்த இலக்கணத்திற்கமைய இவர் ஒரு ''தக்கார்'' ஆவார்.

**ஆர்.எம். நாகலிங்கம்.**

# பத்திரிகையாளராகவும் பிரகாசித்த கல்லூரி அதிபர்



அண்மையில் அகால மரணமடைந்த மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் க.இராசதுரை, பத்திரிகையாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாணத்தின் மதிப்புக்குரிய தினசரிகளான 'ஈழநாடு', 'உதயன்' போன்றவற்றின் செய்தியாளராக அவர் இருந்த காலத்தில் நான் உதயனின் ஆசிரியபீடத்தில் கடமையாற்றியதால் அவரது நெருக்கமான உறவு எனக்குக் கிடைத்தது.

அவர் செய்திகளைத் துருவி ஆராயும் ஊடகத் துறையில் துணிச்சலுடன் நடுநிலை தவறாத செய்திகளை செவ்வனே தருவதில் வல்லவராய் இருந்தார். இவர் உதயன் பத்திரிகையின் பலாலி செய்தியாளராக எண்பதுகளில் கடமையாற்றும்போது பலாலி விமான நிலையத்திற்கும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் சென்று செய்திகளை சேகரிக்கும் வாய்ப்புகளைப் பெற்றார். அவரது ஒரு செய்தியில் காங்கேசன்துறையிலுள்ள கடற்படைத்தளத்தைப் பலப்படுத்துவதற்கு அதி நவீன படைக்கலங்கள் வந்து சேர்ந்தது பற்றிய செய்தியினை அறிவித்திருந்தார். இது கடற்படையினருக்கும் விமானப்படையினருக்கும் எரிச்சலை ஊட்டியதால் அவர்கள் வெகுண்டு அச்செய்தியில் உண்மை இல்லை என்று மறுத்தனர். இது சம்பந்தமாக இவரிடம் விளக்கங்கள் கோரப்பட்ட பொழுது அவர் தனது செய்தி சரியானதே என நிலை நிறுத்தி உறுதியாக நின்றார். இச் செய்தியால் அவர் மறைமுகமான தொல்லைகளை சந்திக்க நேர்ந்தது. அவரின் உறவினர்கள், நண்பர்கள் மெதுவான போக்கை கடைப்பிடிக்குமாறும் கல்வியில் கூடிய கவனத்தை எடுக்குமாறும் இவரை வேண்டிக் கொண்டனர். இவர் ஒரு சிறந்த அதிபர் என்பதுதான் பலருக்குத் தெரியும். ஆனால் அவர் ஒரு அதி சிறந்த துணிச்சல் மிக்க பத்திரிகையாளன் என்பது பத்திரிகைச் சமூகத்தினருக்கு மட்டுமே தெரியும்.

இவர் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஸ்தாபகர் உறுப்பினர்களில் ஒருவராவார். இச்சங்கத்துக்கு என ஒரு அலுவலகம் தேட முன்பு சகல கூட்டங்களையும் இவரின் கல்லூரியிலேயே நடத்தி வந்தோம். இவர் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்துக்கு ஆற்றிய பங்களிப்புகளுக்கு நானும் எமது சங்கமும் மிகக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம்.

இவர் யாழ்.மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய காலம் இக் கல்லூரியின் பொற்காலம் எனக் கூறலாம் . ஒருவர் யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்தை வந்தடைந்ததும் இவர் எமது சந்ததியினருக்கு விட்டுச் சென்ற அழியாச் சின்னங்களாகக் காட்சி தருவது நவீன முறையில் திருத்தி அமைத்த கல்லூரியின் விளையாட்டு மைதானம். அதன் எதிரே கம்பீரமாகத் தோன்றும் மாடிக்கட்டடங்கள், அதனுள் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் வேறெந்தப் பாடசாலையிலும் காணமுடியாத குளிரூட்டப்பட்ட அதிபரின் காரியாலயம், அதனருகே யாழ்.பாடசாலைகளில் முதன்முதலாக அமைக்கப்பட்ட கணனிப் பூங்கா **(Computer Park)**. அறிவுப் பசியை மேன்மேலும் தூண்ட வல்ல நூலகம், இயற்கை ரசனையை மாணவர், ஆசிரியர் ரசித்து மகிழ வண்ண வண்ணப் பூஞ்சோலைகள் ஆகியன இவரின் எண்ணத்தில் உதித்து உருவாக்கப்பட்டவைகள் ஆகும்.

இவரின் மறைவினால் ஏற்பட்டுள்ள இடைவெளி ஈடுசெய்ய முடியாததொன்றாகும். கல்வி உலகிற்கு மட்டுமன்றி பத்திரியைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அவரது மரணம் இழப்பே.

**செ.கதிர்காமத்தம்பி.**

# தேவாரப் பண்ணிசை மணியின் ஓசை ஓய்ந்தது

தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் பரவ வேண்டுமென தேவாரத் திருமுறைகளை பண்ணுடனும் ஓசை நயத்துடனும் பக்திப் பரவசத்துடன் ஓதவேண்டும் என்ற அசையாத நம்பிக்கையுடன் செயற்பட்டு வந்தவர் இசை ஆசிரியர் பண்ணிசைமணி வல்லிபுரம் பரமசாமி அவர்கள்.

மறைந்த பண்ணிசை மணியினது உள்ளத்திலிருந்த எண்ணங்கள் பல சைவாலயங்களில் தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு சொற்பிழையின்றி ஓதுவதற்கு தேவாரப் பண்ணிசை ஓதுவார் மூர்த்திகளை நியமித்து அந்தந்த தேவாரங்களுக்கு உரிய பண் தவறாது ஓதுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதிலும் ஆசாரசீலர்களாக அவர்களை வழிநடத்தல் செய்யவேண்டும் எனவும் பல்வேறு மட்டங்களில் முயற்சி செய்தவர் பண்ணிசைமணி பரமசாமி அவர்கள்.

அன்னார் அகில இலங்கைத் திருமுறை மன்ற ஆரம்பகால உறுப்பினருமாவார். மன்றம் நடத்தும் மாதாந்த நிகழ்ச்சிகளிலும் அநேக நிகழ்வுகளிலும் பங்குபற்றி வந்துள்ளார். இவர்களுடைய திருமுறை இசைச் சேவையை மதித்து அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர். 1998இல் யாழ்ப்பாணம் ,வண்ணார்பண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நடத்திய திருமுறைப்பெருவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

திருமுறைப் பதிகங்களை மிக உருக்கமாகப் பாடவேண்டும், உணர்ந்து பாடவேண்டும், பக்தியுடன் பாடவேண்டுமென மிகவும் மனம் உருகி ஆர்வத்துடன் கூறுவார்கள்.

நீறுபூத்த நெற்றியுடன் நல்லூரில் திருவிழாக்காலங்களில் ஆலய வீதியில் அன்னாரை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கும்.

அன்னாரிடம் இசைப்பயிற்சி, தேவாரப் பண் இசைப்பயிற்சி பெற்ற பலர் இன்னும் ஈழத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தில் உலாவிக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்னாரின் ஆத்மா இறைபதத்தில் இரண்டறக்கலக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

**சி.கிருஷ்ணமூர்த்தி.**

# நூல் விசை

**நூல் : செழிப்பைத் தேடும் பறவைகள்.**
**ஆசிரியர் : புயல்**



இந்த நூலாசிரியர் 'புயல்' தான் வாழ்கின்ற சூழலை நன்கு அவதானித்து தனது கதைகளுக்கான கருப்பொருளை எடுத்து எழுதியுள்ளார்.

நூலின் உள்ளே பழஞ்சோறு, செழிப்பைத் தேடும் பறவைகள், அந்தஸ்து, தொலைந்துபோன உறவுகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் 10 சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் சமூகத்தில் நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற ஏதோ ஒரு விடயத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவனவாக உள்ளன.

போர்க்காலச் சூழலில் மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் இருந்து பட்ட அவதிகள், சீரழிவுகள், துன்பங்கள், சோகங்கள் என ஒவ்வொன்றையும் இந்நூலாசிரியப் புயல் அக்குவேறு ஆணிவேறாக அனுபவித்து எழுதியுள்ளார்.

அதுமட்டுமல்லாது இளம் வயதினரிடையே ஏற்படும் காதல், அதன் காரணமாக அவர்களது எதிர்காலம் எவ்வாறு போகின்றது. அவர்கள் எவ்வாறான மனநிலையை அடைகின்றனர் என ஒவ்வொன்றாக விளக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் சிறப்பு என்னவென்றால் ஏதாவது ஒரு கருப்பொருளை மட்டும் வைத்துக் கொண்டு அனைத்துக் கதைகளையும் படைக்காமல் ஒவ்வொருகதையும் ஒவ்வொரு கோணத்தில் படைத்துள்ளார்.இது இந்நூலுக்கு மேலும் சிறப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு கதையின் சாரம் இன்னொரு கதையில் எந்த வகையிலும் பிரதிபலிக்கவில்லை.

மொத்தத்தில் இந்நூலை எந்தக் கோணத்தில் வைத்துப் பார்த்தாலும் அது சிறப்பானதாகவே காணப்படுகின்றது.

*கங்கா.*



**நூல் : 'இந்துவின் சதுரங்கன்'**
**வெளியீடு : யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம்**
**இதழாசிரியர் : வே.சாரங்கன்**

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழில் வெளிவந்த முதல் சதுரங்கம் சார்ந்த மலராக 'இந்துவின் சதுரங்கன்' அமைவது குறிப்பிடத்தக்கதாகும். சதுரங்கன் பற்றிய சிறப்பு இதழ்களும் நூல்களும் சமீபகாலங்களில் இங்கு வெளிவந்தபோதிலும் அதுவும் மாணவர்களின் ஆக்கமாக முதல் வெளிவருகின்ற இவ்வெளியீடு பாராட்டுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரியதெனில் மிகையாகாது.

அழகுற அமைந்த வர்ண அட்டைப்படத்துடன் வாழ்த்துக்கள், செய்திகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக 14 பக்கங்களும் கட்டுரை, செய்திகளை உள்ளடக்கியதாக 126 பக்கங்களும் விளம்பரங்களை உள்ளடக்கிய 14பக்கங்களும் வர்ண, கறுப்பு வெள்ளை படங்களைக் கொண்டதாக 18 பக்கங்களையும் இணைத்ததாக இம்மலர் அமைந்துள்ளதைக் காணலாம். மொத்தத்தில் 172 பக்கங்களை உள்ளடக்கியதாக இந்த நூல் விளங்குகின்றது. இவற்றுள் 18 ஆக்கங்கள் சதுரங்கம் பற்றியும் பாடசாலையின் சதுரங்கச் செய்திகளைத் தாங்கியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 19 தமிழிலும் 7 ஆங்கிலத்திலும் 26 கட்டுரைகள் சதுரங்கம் பற்றிய பல துல்லியமான செய்திகளைக் கூறும் கட்டுரைகளாக அமைந்துள்ளன. மேலும் மூன்று ஆக்கங்கள் கவிதை வடிவில் சதுரங்கம் பற்றி அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலானவை மாணவ ஆக்கங்களாகவே விளங்குகின்றமை அவதானிக்கத்தக்கது. அதிலும் தமது மாணவர்களை மாத்திரம் உள்ளடக்காது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி போன்ற மாணவர்களிடம் ஆக்கங்களைப் பெற்று, இம்மலர் அலங்கரிக்கப்பட்டிருப்பது போற்றுதற்குரிய தொன்றாகும். மேலும் இது இதர பாடசாலை மாணவர்களிடம் இவ்விளையாட்டில் ஆர்வத்தையும் சிரத்தையை ஊட்டுவதாக அமைவதுடன் நெருங்கிய உறவினையும் வளர்ப்பதாகின்றது. 'இதனை வேறு பாடசாலை பொறுப்பாசிரியர்கள் பின்பற்றலாம். எங்களுக்கும் நல்ல கருத்துக்களை / ஆலோசனைகளை வழங்கலாம் எனப் பொறுப்பாசிரியர் ஓரிடத்தில் சுட்டியிருப்பது பொறுப்பாசிரியரின் சீரிய குணத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு. இவ்விடத்தில் அவரது விரிந்த மனப்பான்மைக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஒரு தசாப்த கால நிகழ்வுகளை வரலாற்றுரீதியாக ஆவணப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. அதுவும் மாணவர்கள் இணைந்து இப்பணியைச் செவ்வனே ஆற்றியிருப்பது பாராட்டுதலுக்குரியதே. சமீபகாலங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகள் வந்த போதிலும் புதிதாக வெளிவருகின்ற பல நூல்கள், சஞ்சிகைகளில் சொற்பிழைகள் காணாமல் இருப்பதில்லை எனலாம். ஆனால் விதிவிலக்காக இம்மலரானது திருத்தமான வகையில் சொற்பிழைகளைத் தேடுங்கள் என்பதாகச் சவால் விட்டு பிரசுரித்திருப்பது போற்றுதற்குரியது. எனினும் இம்மலரானது ஆவணப்படுத்தும் பணியை ஆற்றி நிற்கின்ற நிலையில் ஏதாவது ஓரிடத்திலாவது பிரசுரித்த திகதியை அல்லது வெளியிட்ட காலத்தை மலரில் போட்டிருந்தால் சிறப்பிற்குரியதாகுமெனக் கருதுகிறேன். அது போலப் படங்கள் சிலவற்றிலும் காலங்கள் சுட்டப்பட்டிருந்தால் நன்றாகும். மொத்தத்தில் இந்துவின் சதுரங்கன் ஒரு கடின முயற்சியின் வெளிப்பாடென்பதற்கும் என்றும் வாடாது மணங்கமிழும் மலராகுமென்பதற்கும் இது தக்கதோர் உதாரணமாகும்.

**பேராசிரியர் நா.ஞானகுமாரன்.**

# மக்கள் முகம்



வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட தனி நடனம் பிரிவு II போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆரணி செல்வேந்திரகுமார் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (3-76)

* * *

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த சீ.ஜெகந்தன் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்விக்கான புலமைப்பரிசில் பெற்று அண்மையில் அங்கு பயணமானார். இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.



சீவரத்தினம் - சந்திரவதி தம்பதியரின் புதல்வரான இவர் காங்கேசன்துறை நடேஸ்வர மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளின் பழைய மாணவராவார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறை பி.எஸ்.சி.பட்டத்துக்கான கற்கைநெறியில் சராசரி 70% புள்ளிகளுக்கு மேற்பெற்று, டாக்டர் எ.என்.எஸ்.குலசிங்க விருதைப் பெற்ற தமது கலாநிதிப் படிப்பிற்காகப் கேம்பிரிட்ஜ் சென்றார்.

* * *



சாவகச்சேரி, டச்சு வீதியைச் சேர்ந்த எம்.பீ.சண்முகநாதன் மும்மொழி (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) சத்திய மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமான இவர் சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளராகவும் சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலயத்தில் இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியராகவும் உள்ளார். (த-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 075xxxx தொடரிலக்கமுடைய **Kubota** இரு சக்கர உழவு இயந்திரம் (லான்மாஸ்ரர்) விற்ப னைக்குண்டு. தொடர்பு: சி.நாகராசா, நாரந்தனை வடக்கு, தான்தோன்றிஅம்மன் கோயிலடி, ஊர்காவற்றுறை. (44152)

ஆசிரியரொருவரின் சொந்தப் பாவனையில் உள்ள புதிய மொடல் Gy தொடரிலக்கமுடைய **Bajaj** ஸ்கூட்டர் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 071-3055971. (44110)

2 ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (44111)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயில் வீதியில் உள்ள 1½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.0776043527. (44173)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன ஜேர்மன் செப்பேட் 45 நாள் குட்டிகள் விற்பனைக்குண்டு. (பூச்சி அகற்றி தடுப்பூசி போடப்பட்டது) தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (44176)

அல்சேசன் நாய் (பெண்) விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: அ.நித்தியானந்தன், இணுவில் மேற்கு, மானிப்பாய் வீதி,இணுவில்.(44159)

### தேவை

வெளிநாட்டில் புத்தகக் கண்காட்சிக்கு இலங்கை எழுத்தாளர்களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், ஆய்வுகள் 5 பிரதிகள் தேவை. இலங்கையில் அச்சுப்பதிவு பெற்றாக இருக்கவேண்டும். பிரதிகள் உரிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: 0112331475, 077345666.(சி-46796)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 26.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - உடுவில் (ஆலடி), நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43135)

### தவறிவிட்டது

நொக்கியா தொலைபேசி ஸ்ரான்லி பாடசாலை நாவலர் றோட்டிற்கும் சித்தன் கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கே.வி தொலைத் தொடர்பு நிலையம், சித்தன்கேணி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது 0776264644 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (44150)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

*ஆண்டு 3 இல் இருந்து பட்டப்படிப்பு வரை தனித் தனி பிரிவு. ஆங்கிலத்தில் கதைக்கவும் சோ பரீட்சைகளில் சிறந்த சித்தி பெறவும்* **By: விக்னேஸ்வரன்** *ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.*
(44190) (21.15.45)

### பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (**Crumbed Rubber**) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (**DSI** ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). **T.P.:** 021-4590372 (சி-46731)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:077-3253104, 077-6279671.* **சுதுமலை, மானிப்பாய்,**
(44178)(21.15.45)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Video டெக், ஓடியோடப்பிங் இன்சைட் டெக், DVD பிளேயர், Audio CD பிளேயர், கான்போண் அத்துடன் இந்தியன் ரைக்ரர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:
**ஜெகன் விடியோ ஓடியோ சென்ரர்**
**சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.**
**T.P. mobile 0773523135,**
(43247) **House 0212228267** (21.15.45)

### பூங்கன்றுகள் விற்பனைக்கு

பயன்தரு மரங்கள், மற்றும் பூங்கன்றுகள் வருட இறுதியை முன்னிட்டு மலிவு விலையில் விற்றுத் தீர்த்தல் [நல்ல இன தோடை, தேசி, கொய்யா, றோஸ், சிதம்பரத்தை, மொசந்தாஸ் குறோட்டன், பாம்ஸ், சைபிரஸ், ரெசினர் போகன்பிளா இன்டோற் பிளாண்ட்]
(44182) தொடர்பு: **கரிஷ் காடின்** (21.45.15)
**நந்தாவில் லேன்,**
**[சம்பியன் லேன் K.K.S வீதி] கொக்குவில்.**

## புலமைப்பரிசில் நிதிய ஆரம்பமும் 'அருள் நிதி' நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,டிசெ.17

சமூகப் பற்றாளர் வி.சி.சின்னத்தம்பி ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் ஆரம்ப நிகழ்வும், அருள்நிதி சைவ நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் கலாமன்ற வீதியிலுள்ள செல்வ பவனத்தில் நடைபெறவுள்ளன.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு.செல்லத்துரை, உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவர் மு.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பிரார்த்தனை நிகழ்வைத் தொடர்ந்து அருள்நிதி சைவநூலை பேராசிரியர் கலைவாணி இராமநாதன் வெளியிட்டு வைப்பார்.

நினைவுரைகளும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிலையத்திற்கு அமரரின் பிள்ளைகளால் 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு புலமைப் பரிசில் நிதியம் ஆரம்பிக்கும் நிகழ்வும் இடம்பெறும்

(எ-204)

**SAAMS TECH இன் 5ஆவது**

## இலவச ஆங்கில நேரடி வகுப்பு

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஆங்கில Diploma பரீட்சைக்கான இலவச வகுப்பு

இடம் : ரிம்மர் மண்டபம்
(யாழ்.மத்திய கல்லூரி அருகில்)

காலம் : இன்று 17.12.2005

நேரம் : 9.00 - 11.00, 11.00- 1.00
2.00-4.00, 4.00-6.00 மணி
(ஏதாவது ஒரு வகுப்பில் பங்குபற்றலாம்)

புதிதாகப் பதிவு செய்வோரும் வகுப்பில் கலந்து கொள்வதன் மூலம் பதிவு செய்யலாம்.

NOTE:- 49-60 வரையான அலகுகள் இலவசமாக வழங்கப்படும்.

அலுவலர்கள், பாடசாலை மாணவர், வியாபாரிகள் ஆசிரியர்கள், மருத்துவர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம்.

ஆங்கில மொழி பயில்வது இங்கு மிக இலகுவானது

**SAAMS TECH** 841, Hospital Rd, 233/4,Kasthuriyar Rd., Jaffna.
(44188) T.P : 222 9505, 4591571 (21.15.45)

# இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்கள் மட்டுமே கொண்ட படைப்பிரிவு

## வற்புறுத்துகின்றது முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான இராணுவத் தில் முஸ்லிம் இளைஞர்களைக் கொண்டு தனியான படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இப்போதுள்ள சம்பிரதாய பாதுகாப்பு முறை மூலம் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. மாறாக இதுபோன்ற புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கூறினார் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான்.

கிழக்கின் தற்போதைய நிலைமை குறித்து அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கில் இப்போது இடம்பெற்று வருகின்ற வன்முறைகள் காரணமாக கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. மீண்டும் ஒருமுறை யுத்தம் வருமோ என்ற அச்சம் நிலவுகின்றது.

இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது முஸ்லிம்கள்தான். முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். கிழக்கு வன்முறைகளில் ஈடுபடுவோர் யார் என்று தேடிப் பார்ப்பதைவிடமுஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படுவதே சிறந்தது.

கிழக்கில் முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறை நடவடிக்கைகளுக்கு பலர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. புலிகள், கருணா குழுவினர், இராணுவத்தினர் மற்றும் அமைச்சர்கள் எனப் பலரும் இதில் அடங்குகின்றனர்.

இவர்களில் யார் இந்த வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள் எனத் தேடிக்கண்டுபிடிப்பது முடியாத காரியம். இதை விடுத்து, முஸ்லிம்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதே சிறந்தது. அப்போதுதான் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் விடயத்தில் சம்பிரதாய - பாரம்பரிய- முறை நீக்கப்பட வேண்டும். இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்களைச் சேர்த்து தனியான படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்தப் படைப்பிரிவே கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

இத்தகைய கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டு புறக்கணிக்கப்பட்டு கிழக்கின் தற்போதைய நிலை மேலும் நீடித்துக் கொண்டு சென்றால் முஸ்லிம்களின் பாதுகாப்பை முஸ்லிம்களே உறுதிசெய்யும் நிலை ஏற் பட்டு விடும்.- இவ்வாறு அவர் கூறினார். (க-3)

## கண்காணிப்புக்கு 'கமெரா' அமைப்பு

கொழும்பு நகரின் முக்கியமான 27 வீதி சுற்று வட்டங்களில் கண்காணிப்புக் கமெராக்களை பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மொரட்டுவைப்பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு அமைவாகவே மேற்படி கண்காணிப்புக் கமெராக்களை பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளுக்காக சுமார் 20 கோடி ரூபா செலவிடப்பட் டுள்ளது.

கொழும்பு நகரில் இடம்பெறும் வன்செயல்கள் மற்றும் கொள்ளை முயற்சிகளின் பின்னணிகளை இதன் மூலம் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்தலாம் - எனவும் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார். (க-3)

## உரம் பெறுவதற்கு விண்ணப்பம்

உரமானியத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் உரம் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சாவகச்சேரி கமநல சேவை நிலையம் கோரியுள்ளது.

அப்பகுதி விவசாய சம்மேளனங்களின் ஊடாக இந்த விவரங்கள் திரட்டப்படுகின் றன.

2005 - 2006 ஆம் ஆண்டு காலபோகத்தில் செய்கை பண்ணப்பட்ட மொத்தப் பரப்பளவு, முழுப் பெயர், விலாசம் நெற்காணியின் பெயர், பரப்பளவு, சொந்தம் அல்லது குத்தகை போன்ற விவரங்களை உடனடியாக அறிவிக்குமாறு கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.ஜெகதீஸ் வரி கேட்டுள்ளார்.(எ-170)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கிருஷ்ணன் (அப்பையா)

(B.Sc., Dip.in.Edu, F.I.F.A, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவன், முன்னாள் ஆசிரியர் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாகிராக் கல்லூரி - கொழும்பு, றோனி ஆசிரியர் கலாசாலை கனோ. நைஜீரியா)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணன் 11.12.2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற தம்பிராசா - சோதியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் பாசமிகு சகோதரனும், ஜெயமணியின் அன்புக் கணவரும், பூமணி, காலஞ்சென்ற சண்முகராசா மகாலிங்கம், குலேந்திரன்(காந்தி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாஜினி (கனடா), ராதாகிருஷ்ணன் (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா), சாந்தினி(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிஞ்ஞகநாதன் (கனடா), ரேவதி (கனடா), தயரூபன் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும் கீர்த்தனன் (கனடா), பவித்திரா (கனடா), தாரணன் (கனடா), ஷானுகா (கனடா), லக்ஷிகா(கனடா), பிரீத்திகா(இத்தாலி), அக்ஷயா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.12.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி ஜெயமணி கிருஷ்ணன்**
**(மனைவி).**

துவாரகை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(44185)(21.15.45)

## அப்பர் தியாகராசர்

(ஓய்வு பெற்ற படவரைஞரும் தொழில் நுட்ப உத்தியோகத்தரும்)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அப்பர் தியாகராசர் 15.12.2005 அன்று காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற அப்பர் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பெருமையினார் - முத்தம்மா தம்பதியரின் மருமகனும் சிவகுமார் (பிரான்ஸ்), ஸ்கந்தகுமார் (லண்டன்), ஞானசக்தி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காதரன் (பிரான்ஸ்), சுபாஜினி(பிரான்ஸ்), அருணா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிஷாங்கன், நிதுஷன், நீரஜா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், குமாரசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மினி தேவி, காலஞ்சென்ற சிவயோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (17.12.2005) சனிக்கிழமை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக கொத்துதுறை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

"திலகவாசா"
ஞானசம்பந்தர் வீதி,
வட்டு.தென்.மேற்கு
வட்டுக்கோட்டை.
**T.P.:** 077 6157604

(சி-468174)(21.45.15)

# ...யத்தின் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

# ...Students' Union - Jaffna



## ...sage from ...aduates Alumni Association.

helping hands to Jaffna Teaching Hospital during crisis situations.

The team spirit and cohesiveness of this student body is highly commendable. In fact, this is the essence behind their all successes. I esteem highly their valuable commitment towards the social consciousness, where they live.

On this occasion I wish them all success in their future educational and social endeavours.

*Dr.S.Raviraj,*
*Director, Teaching Hospital Jaffna,*
*& President "Alumni".*

## ...om the President ...edical Association

books for our library. Further they are the cornerstones during our annual session every year in many ways to make that event a success.

Our best wishes for both a successful day and for the future of your service.

*Dr.G.Bavani,*
*President, Jaffna Medical Association,*
*V.O.G, General (Teaching) hospital, Jaffna.*

## ...n the Former Dean

six years.

I have been observing the activities of the Medical Students' Union. The Medical Students' Union has been always very cooperative with the administration in all aspects. At this juncture the Medical Students' Union has to be congratulated. Being one of the former Deans of this Faculty, I would like to thank all the present and past staff members of this Faculty, Consultants of the Teaching Hospital, Jaffna, Teaching Hospital, Batticaloa, General Hospital Vavuniya and Base Hospital Trincomalee and all the well-wishers, parents of the students and the students. I believe that the same spirit will continue among the Staff and Students and the Medical Students' Union to run this Faculty in Future too.

I wish all the best for the Medical Students' Union.

*Prof.Ms.V.Arasaratnam,*
*Department of Biochemistry,*
*Faculty of Medicine,University of Jaffna.*

## Message from the Chancellor

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Prof. Mailvahanan SIVASURIYA
MBBS (CEY), FRCS (ENG), FRCS (EDIN), FRCS (GLASG), FCS (SL), FACS
FRCOG (GT. BRIT), FCOG (SL), Hon. DSc. (JAFF.)
PROFESSOR EMERITUS,
CHANCELLOR,
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Residence :
67/2, Temple Road,
Jaffna, SRI LANKA
Tel. 0094 - 21 - 222 3929

09 December 2005

Chancellor's Message

As one of the Founder Professors (1979) of the Faculty of Medicine/University of Jaffna Sri Lanka I am very happy to convey this message of felicitation to the Medical Students' Union on the occasion of its Silver Jubilee which falls on 12 December 2005.

Completion of 25 years after any significant event or its SILVER JUBILEE calls for celebrations in a fitting manner as well as 'prayers' and 'blessings' for the successful continuation of its desired goal/objective.

I congratulate the Medical Students' Union(MSU) for its record of achievements over the past 25 years despite the problems it had to face on account of the 'war' situation in the country.

I wish the MSU a very bright future and every success in its endeavours.

M. Sivasuriya
Prof. M. Sivasuriya
Chancellor.

## Struggle for Students' Rights

I am very glad to learn that the Medical Students' Union of the Jaffna Medical Faculty is bringing out a commemorative publication to mark the Silver Jubilee year of the Union. My congratulations for their achievements and best wishes for an even better future." I am pleased to send this message on the occasion. The MSU can be justly proud of their achievements in the last twenty five years.

Going back to the formative days of the faculty with its humble beginning in the borrowed building at Kaithady brings nostalgic memories. The students and the staff of the faculty grew as a closely knit healthy family. With the intake of the third batch of medical students in 1980, the super seniors led by Mr.Ketheswaran, with the advice of the staff, decided to maintain their separate identity and formed their own Students' Union.

The MSU was always in the forefront fighting for their rights and against injustices within the University as well as outside. The Medical Students' Union had set examples to other student bodies in this University by organising various sports, religious and cultural activities of high standard to harness the latent talents while enriching the social life of the students. These healthy traditions are now part of the MSU, calendar though they have lost their initial momentum and the vision.

I wish the M.S.U success in all their endeavours for the benefit of the entire faculty and the society at large.

*Prof.S.V.Parameswaran,*
*Former Dean, Department of Physiology,*
*Faculty of Medicine, University of Jaffna.*

## Message from the President of Jaffna Medical Overseas Alumni

I am rather span like crazy top reminiscing the old days at the Jaffna Medical School. As a second batch student from Jaffna Medical Faculty I was very much involved with the activities of the students union during its pioneer days when it was initiated in 1980.

We were located in Kaithady in the temporary building. Medical Students' Union and its president was responsible for the faculty moving to its present location so that the faculty could grow its wings without any hindrance.

When I visited the faculty after 15 years last June, I was so proud of witnessing the seed we have sown almost 25 years ago. It is like a big banyan tree with branches and roots everywhere.

Now almost 25 years has passed since the creation of our successful body, my heart is pervaded with enormous pride over the great achievements made. I wish you all well at your Silver Jubilee celebrations.

*Andy Somesan,President,*
*Jaffna Medical Faculty, Overseas Alumni.*

## Asset to our society

I have pleasure in sending the message on the occasion of the release of a publication to celebrate the Silver Jubilee of the Medical Students' Union of University of Jaffna.

Medical Students' Union has always played a vital role in the development of the Medical Faculty and University at large. The medical students are proud product of our society and they are part of rich tradition of our University student society. They always display good leadership and responsibility. Thus the Medical Students' Union is an asset to our society and the University.

In my tenure as Vice-Chancellor, I have always seen that they play very responsible role with me in academic administration and in solving student's issues.

It is the fervent hope of the academic community of the University that the students of the medical faculty via their dynamic nature and high calibre of intellect and potential would further embarkon the programmes to extend their lavish contribution and service to the society, particularly at moments of crises such as natural disasters or any form of conflict when people are desolate and desperate. It seems to be vital that the Medical Students' Union needs to have a cordial link and strong co-ordination with the society so that it can have the access to a comprehensive awareness and right picture of the needs of the society and subsequently it could play its role according to the requirements of the prevailing situation. I immensely appreciate the entire past service of the Medical Students' Union and trust it would go ahead further forward the societal uplift.

*Prof.S.Mohanadas,*
*Vice-Chancellor,*
*University of Jaffna.*

## My Duty to Congratulate....

It is my duty to congratulate the MSU for its excellent contribution to the welfare of the students of the faculty and shouldering considerable amount of responsibilities in academic and non-academic activities of the Faculty, especially during the very difficult period. The MSU has maintained a good working relationship with the administration and has involved in arranging academic programmes to meet the difficulties that arose as a result of shortage of staff. The students have taken the responsibility of arranging the clinical lectures, lecture hall and associated activities during the difficult periods.

The initiative of the MSU to conduct the orientation programme for the fresh-year students and the guidance given to them in settling down with university life is commendable even though it can still be improved.

The MSU had its own equipments for table tennis, badminton, volleyball and several indoor games. It made facilities for learning musical instruments and was able to present good musical programs without the participation or with minimal help from external experts. This trend is now diminishing and the present and future committees should take this into consideration.

The faculty has been able to organize exhibitions for the public and schools and interact with them only because of full commitment and corporation from the MSU. The students have always behaved well and earned good name from all concerned even though I had to face some unpleasant encounters with some students during the organizational phase of these activities.

The MSU of the early years of the faculty raised funds by special fund-raising activities and used the funds for promotion of sports and other activities among the medical students. I am sad to observe that the fund raising has become getting sponsors and spending on relatively luxurious activities. I hope that the MSU meets regularly, get more advice from various experts and progress with better planning.

The IT centre managed by the students has earned a good name for the faculty and is considered as a good example of student responsibility. With the IRQUE development, the student - staff interaction in planning and managing this important section of the faculty must improve.

One important expectation remains to be fulfilled and that is good food and refreshments for students in the canteen. MSU has to concentrate on having appropriate mechanism to run better canteen as the management is with it.

I wish to see more and more students actively participating in MSU activities by forming several sub groups for many more activities like providing better student welfare services, creating better learning environment, and development good leadership qualities.

*Dr.K.Sivapalan,*
*Dean,*
*Faculty of Medicine, Univesity of Jaffna.*

### Committee of Medical Students' Union-2005

President :- Mr. T. Gandeepan
Vice president :- Mr. B.Senthooran
Secretary :- Mr. S. Raveendran
Junior Treasurer :Miss. B. Jegamalini
Editor :- Miss. J. Jayappiria
Committee members :- Mr.T.Niroshan, Mr. N. Mathavan, Mr.V. Sivashanker, Mr. K. Ragulan, Mr. P. Piriyathasan, Mr. E. Ethayarooban, Mr. T. Nilojan

வாழ்த்துகின்றோம்
E.Sபேரம்பலம் சக நிறுவனம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியம் சாதித்தவை பல: அதேபோல் சந்தித்த நெருக்கடிகளுக்கும் கணக்கில்லை!

**யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் இன்று தனது 25ஆவது அகவையைப் பூர்த்திசெய்கின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

**யாழ்**. மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வெள்ளிவிழாவினைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் தனது கடந்தகாலச் செயற்பாடுகள் பற்றிய மீள்பார்வை இன்றியமையாததொன்றாகிறது.

எமது ஒன்றியமானது மாணவர்களை ஒருங்கிணைத்தல், அவர்களது நலன்களைப் பேணுதல், உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றோடு மட்டும் நின்றுவிடாது எமது சமுதாயத்தின் நலன் பேணும் பணியிலும், இடர்வந்த வேளைகளில் துயர்துடைக்கும் உயரிய சேவைகளிலும் ஈடுபட்டுவந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

யுத்தகாலச் சூழ்நிலையில் எமது பீடம் மூடப்பட்டுவிடும் அபாயம் தோன்றிய வேளையில் பல இடர்பாடுகளைக் களைந்து மருத்துவ பீடத்தின் இன்றைய நிலையை எட்டுவதில் மருத்துவ மாணவர் ஒன்றியம் ஆற்றிய பங்கு காத்திரமானது.

எமது தலைமையின்கீழ் மருத்துவ மாணவர் ஒன்றியம் செயற்பட்ட 2003 - 2005 ஆண்டு காலப்பகுதியிலும் எமது ஒன்றியம் பல உள்ளக, சமுதாய நலன்சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

பல செயற்பாடுகளில் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இணைந்து மாணவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்ததோடல்லாது, சில விடயங்களில் மாணவர்களின் உரிமைகளை நிர்வாகத்திடமிருந்து போராடியும் பெற்றுக்கொண்டோம். அத்துடன், நின்று விடாமல் எழுத்துருவில் இருந்தபல வாக்குறுதிகளைச் செயல்வடிவிற்குக் கொண்டுவருவதற்கும் பலமுறை போராடி அதில் வெற்றியும் கண்டோம் என்பது இங்கு மகிழ்ச்சியோடு நினைவுகூரத்தக்கதோர் நிகழ்வாகும்.

அதிலும் குறிப்பாக 'உதயன்' தினசரியானது போர்ச் சுழல் உள்ளடந்த காலமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்கு உதவிபுரிந்து எமது குறிக்கோள்களை அடைவதில் பெரும் பங்காற்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளில் பாரிய இடப்பெயர்வுகளை எமது மக்கள் சந்தித்தபோது ஆபத்து நிறைந்திருந்த இடங்களுக்கு எமது ஒன்றியம் விரைந்து சென்று உணவுப் பொருள்களையும், உடுபுடைவைகள் மற்றும் மருத்துவ உதவிகளையும் வழங்கியது.

வைத்திய உதவிகள் கோரி சில சத்திர சிகிச்சைகளுக்காக வசதிகுறைந்தோர் வருகை தரும்போதும் அவர்களுக்காக நிதி சேகரித்துப் பல தடவைகள் எமது ஒன்றியம் வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் எமது கற்றல் தேவைகளுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்க இழுத்தடிப்புகளை மேற்கொண்டு மறுப்புத் தெரிவித்த போது சர்வதேச மாணவர் பேரவை உரிய சந்தர்ப்பங்களில் எமக்கு வாகன வசதிகளை வழங்கியிருக்கின்றது.

எமது பீடத்தின் நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவதில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் நிதிரீதியான, ஆலோசனை ரீதியான பங்களிப்பு மகத்தானது. கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் அவர்கள் ஆற்றிவரும் உதவிகளை நினைவுகூர்ந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பீடத்திற்குப் பல வகைகளில் நிதி உதவி செய்துவரும் வர்த்தக நிறுவனங்களுக்கும் இந்தச் சமயத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அறிக்கைகள், கோரிக்கைகள், கருத்துக்களை உரிய நேரங்களில் வெளிக் கொணர்ந்த பத்திரிகைகளின் பணி எமது ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கு துணைநின்றிருக்கின்றது.

எமது இந்த 25 வருட கால வரலாற்றுப் பதிவில் உள்ளூர் பத்திரிகைகள் எம்முடன் இணைந்து செயற்பட்டமையானது இத்தருணத்தில் நினைவு கூரப்படவேண்டிய ஒன்று.

வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் மருத்துவக் கல்வியில் கணனி இன்றியமையாத ஒன்றாகும். எனவே, கணனியினதும் வலையமைப்பு (INTERNET) இனதும் இன்றியமையாத தேவையினைக் கருதி பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவித உதவியும் செய்ய முன்வராத நிலையில் எமக்குத் தேவையானவற்றை பல சிரமங்களுக்கு மத்தியில் எமது முயற்சியாலேயே பெற்று மாணவர்கள் பயனடைய வழிவகை செய்தோம்.

அதேவேளை - மருத்துவபீடம் தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடிய வேளையில், எமது மருத்துவபீட மாணவர் ஒன்றியம் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு அந்தக் கொண்டாட்ட நிகழ்வாக இடம்பெற்ற மருத்துவக் கண்காட்சி, கலைநிகழ்வுகள் என்பன அமைகின்றன.

இவற்றோடு வருடாவருடம் இடம்பெற்று வரும் சிரமதானப்ப ணிகளும், இரத்ததான நிகழ்வுகளும் மற்றும் பல சமுதாய நலன் சார்ந்த நிகழ்வுகளும் மாணவர் ஒன்றிய வழிகாட்டலில் இடம்பெற்றன. வேலைப்பழு நிறைந்த மருத்துவக்கற்கை நெறியில் மாணவர் ஒன்றியமும், மருத்துவபீட மாணவர்களும் செய்துவ[illegible]த உதவிகள் மக்கள் மத்தியில் வரவேற்பைப பெற்றதென்பதில் வியப்பொன்றுமில்லை. இவற்றோடு கலையார்வம் கொண்ட மாணவர்களுக்கு களம் சமைத்துக்கொடுக்கும் வருடாந்த 'நாடி' இதழ் வெளியீடும் அதனோடு சேர்ந்து நிகழ்ந்த நாடக விழாவும் கலை நிகழ்வுகளும் குறிப்பிடத்தக்கவை.

2004 இன் இறுதியில் நிகழ்ந்த துயர் நிகழ்வான சுனாமி இயற்கை அனர்த்தத்தில் எமது பீட மாணவர்கள் செயற்பட்டவிதம் பலரது பாராட்டினைப் பெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கெல்லாம் போக்குவரத்துச் சிரமங்களுக்கு மத்தியிலும் தங்களது இயன்ற மருத்துவ உதவிகளை மேற்கொண்ட தோடல்லாமல், நிவாரணப் பணிகள் துரிதமாக இடம்பெறுவதிலும் உதவிபுரிந்தார்கள். கற்றல் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு ஆற்ற முடியாத சோகங்களோடு அலை பாய்ந்த எம் உறவுகளுக்கு எமது மாணவர்கள் ஆற்றிய பணி அளப்பெரியதொன்றாகும்.

இவற்றுடன் குழந்தைகளின் வைத்தியச் செலவுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட 'அரும்புகள்' எனும் திட்டமும் மாணவர் ஒன்றியத்தினால் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறது.

இவ்வேளையில் எமது பல செயற்பாடுகளுக்குப் பின்புலமாகச் செயற்பட்டுவரும் எமது பீடத்தின் பழைய மாணவர்களான தற்போது புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் வைத்தியர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டி யவர்களாவர். எமது மாணவர் ஒன்றியத்தின் கணனி விரிவாக்கத்திலும் விரிவுரையாளர்களின் போக்குவரத்து தொடர்பான செலவீனங்கள் மற்றும் சுனாமி போன்ற இயற்கையனர்த்த நிகழ்வுகளுக்குத் தேவையான உதவுப்பொருள்கள், மாணவர்களுக்கான உதவிப் பணங்கள் என்பவற்றை வழங் கி வருவதில் அவர்களது பணி மகத்தானதாகும்.மற்றும் எமது பீட மாணவர்களின் நலன்களுக்காகத் தங்களாலான அனைத்து உதவிகளையும் வழங்கிவரும் பல்துறையைச் சேர்ந்த நலன்விரும்பிகளும் இங்கு நன்றியுடன் நினைவு கூரத்தக்கவராவர். ✱

**இ.விமலன், சி.மதிவாணன்**
**(2003-2004)**


## வாகனம் வாடகைக்கு அமர்த்தல்

எமது நிறுவனத்தின் செயற்பாடுகளிற்கு ஒரு மினிபஸ் (**Rosa / Journey** ரகம்) குறைந்தது 25 ஆசனங்களுடனும, ஒரு **Hiace** வானும் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. தகுந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 25.12.2005

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**செயல்திறன் அரங்க இயக்கம்,**
**"அருளகம்"**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**



Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7341765 முதல் 7349280 வரை சீட்டிழுப்பு இல. 194 திகதி 15-12-2005

வெற்றி எண்கள் **0 4 6 6 8 0** சுப்பர் எண் **11**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,33,73,375/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,33,73,375/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/- | 3,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 58 | 5,000/- | 2,90,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 633 | 500/- | 3,16,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 6,273 | 50/- | 3,13,650/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 62,169 | 10/- | 6,21,690/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/- | 35,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 67 | 1,000/- | 67,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 625 | 100/- | 62,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 6,229 | 20/- | 1,24,580/- |
| | | மொத்தம் | 21,80,920/- |
| [illegible] | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 27,83,520/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,35,47,825/-**

| | |
|---|---|
| கொழும்பு | 7345780-8-15 |
| மாத்தளை | 7346445-3-80 |
| கம்பஹா | 7343920-0-87 |
| அனுராதபுரம் | 7347000-3-61 |
| மாத்தறை | 7342558-1-78 |
| களுத்துறை | 7341876-3-58 |
| குருநாகல் | 7347506-9-56 |
| திருகோணமலை | 7344128-4-84 |


## இலங்கை வங்கியின் 3 கிளைகள் இன்றும் நாளையும் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.17

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை வங்கியின் யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கிளை ,பருத்தித்துறைக்கிளை ,மன்னார் கிளை என்பன இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

.(எ)


**வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்**
**மணல் விநியோக அறிவித்தல்**

17.12.2005 சனிக்கிழமை 17.11.2005 ஆம் திகதி இடப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்கு மணல் விநியோகம் நடைபெறும். அடுத்துவரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் அரச, அரசசார்பற்ற நிறுவன அனுமதிப்பத்திரங்களுக்கு மணல் விநியோகம் நடைபெறும். எதிர்பாராமல் மீண்டும் மழை பெய்யும் இடத்து இந்த ஒழுங்குகளின்படி மணல் விநியோகம் நடைபெறமுடியாமல் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். தனியாருக்கான மணல் விநியோகப் பத்திரத்துக்கு புதிதாக திகதியிடல் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம்.


## சான்றிதழ் வழங்கல்

தென்மராட்சி, டிசெ.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ் நாளை ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும் லயன்ஸ் கழக நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கப்படுமென கழகச் செயலாளர் லயன் எம்.பீ. சண்முகநாதன் தெரிவித்தார்.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு கடந்த ஆறு மாதங்களாக ஆங்கிலமொழிப் பயிற்சி வகுப்புக்கள் கழகத்தினால் நடத்தப்பட்டன என அவர் தெரிவித்தார்.

மேலும் இரண்டாம் கட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(எ)


## புலமைப் பரிசில் திட்டம் - 2006

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

எமது நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை மூலம் மிகக்குறைந்த கட்டண சலுகையுடன் கணினி கற்கைநெறியை நீங்களும் கற்கலாம்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை நேரில் அல்லது தபால் மூலமாக எமக்கு 30.12.2005 ற்கு முன்னர் கிடைக்க செய்யவும்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுங்கள்

பரீட்சைக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

## கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

# நூல் வெளியீட்டு விழா

**(HI) Story of Kokuvil Hindu College**
by
**S. Ratnapragasam**
(பழைய மாணவர்)
எனும் நூல் வெளியீடு

இடம்:
**கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபம்**

காலம்:
18.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-46521)
(54-11-13)

பழைய மாணவர் சங்கம்.
கொக்குவில் இந்துக் கல்லூரி

---

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப் பீடம்**
**பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை**

# நெறிக்கான அனுமதி - 2006

மேற்படி கற்கைநெறிக்கான அனுமதித் தேர்வு 18.12.2005 அன்று நடைபெறமாட்டாது. 24.12.2005 காலை 9.30 மணிக்கு நடைபெறும். விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் அடையாள அட்டையுடன் வரவேண்டும்.

(சி-46822)
(54-11-13)

பதிவாளர்.

---

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சிவசம்பு குணரத்தினம்

(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்-வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு, உதவிப் பணிப்பாளர் - வடக்கு,கிழக்கு மாகாண இளைஞர் விவகாரஅமைச்சு, உதவிச் செயலாளர்-இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம், முன்னாள் உதவித் தலைவர் - இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம்)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் குளங்கரை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு குணரத்தினம் அவர்கள் 16.12.2005 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு-சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம்-இரத்தினம்மாவின் மருமகனும் சிவனேசரத்தினம் (ரதி, ஓய்வு பெற்ற பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், பார்த்தீபன்(பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம், கொழும்பு), பிரதீபன்(விரிவுரையாளர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்), சுகந்தீபன்(மருத்துவபீட மாணவன், யாழ்ப்பாணம்), தர்ஷிகா(மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தி, யசீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் பழனிவேலு, பாக்கியலட்சுமி, சோதீஸ்வரி காலஞ்சென்றவர்களான நடராசா, பரமசாமி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பேராசிரியர் மகேஸ்வரன் (விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணம்), சுதந்தி ரேஸ்வரன், ஞானேஸ்வரன் (பொறியியலாளர்,நியூசிலாந்து) இராஜேஸ்வரன் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்,கொழும்பு), திருமதி பத்மனேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்), திருமதி ஜெயபாலன்(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி சிவானந்தராசா (பொறியியலாளர், புருணை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 17.12.2005 மாலை வரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சிலும் பின்னர் திருகோணமலை கலாசார மண்டபத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

40,4/2 உருத்திரா மாவத்தை
கொழும்பு-06
தொலைபேசி இல:- 0777531350

தகவல்:-
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

---

## வீதியோர மரங்களை வெட்டிவிடும்படி வற்புறுத்தல்

குடாநாட்டின் பிரதான வீதிகளில் கரையோரம் அடர்ந்து வளர்ந்துள்ள மரங்கள்,வேலிக் கதிகால்கள்,பற்றைகள் என்பவற்றை வெட்டுமாறு பொதுமக்களை படையினர் கட்டாயப்படுத்தி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

படையினரின் பிரதான போக்குவரத்து மார்க்கங்களான கண்டி வீதி,பலாலி வீதி, பருத்தித்துறை வீதி,மானிப்பாய் வீதி,காங்கேசன்துறை வீதி போன்றவற்றில் உள்ள மக்களே இவ்வாறு வற்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (ஒ-30)

## சிறைக் கைதியின் கவிதை நூல் வெளியீடு

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி கல்லடி றொபேட் எழுதிய 'சிறையில் பூத்த உணர்வின் ஒளி' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உயிரிழந்த அனைவருக்கும் இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

'எழுகலை' இலக்கியப் பேரவையின் தலைவர் பு.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள வெளியீட்டு விழாவின் சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்துவார்.

ஆய்வுரையை கலை இலக்கியப் படைப்பாளியான போராளி திருமதி மலைமகளும் வெளியீட்டுரையை பிரபல எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமாரும் பதிலுரையை தமிழீழ சட்டக் கல்லூரிச் சட்டவாளர் க.ஜெகதீஸ்வரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த வைபவம் கிளிநொச்சி 'எழுகலை' இலக்கியப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-203)


**படிவம்**

ஆவண உதவியாளர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி
16-01-2006

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.


---

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
யாழ். பிராந்திய நிலையத்தில்
எந்திரவியல் டிப்ளோமா
கற்க விரும்புபவர்களுக்கான

## அறிமுக கருத்தரங்கு

(கொழும்பு சிரேஷ்ட விரிவுரையாளரினால்)

நாளை ஞாயிறு 18.12.2005
முற்பகல் 10 மணிக்கு
அனைவரும் வாரீர், அறிவீர்
விண்ணப்பப்படிவங்கள் பெறுவீர்.

(44197)
(54-11-13)

எந்திரி என். உதயகுமார்
விரிவுரையாளர்.


**ராஜா** யாழ்ப்பாணம்

பிரசன்னா, மீராஜஸ்மின்
நடித்த

**கஸ்தூரிமான்**

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்



ஷாம், சினேகா, வடிவேல்
நடித்த
காட்சி நேரம் மாற்றம்
10.30, 2.00, 5.15, 8.15

**ABCD** 10.30, 2.00 (பு. நே)

Super Star Hero
Pom Cruise in *War of the World*
5.15, 8.15 (ஆங்கிலம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி
விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த

**சிவகாசி**

கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா
வடிவேல் நடித்த
**ஆறு**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜூன், நமிதா,
வடிவேல் நடித்த

**ஆணை**



தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


---


# கணக்காளர் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் மொபிட்டல் நிறுவனத்திற்கு கணக்காளர் பதவிக்கு ஆண்.பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 25 ற்கு மேல் உள்ளவர்கள் 23.12.2005 இற்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்.

**மொபிடெல்**
412. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P:- 0777744863-021 2222031


---

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா கண்மணி



பழம்றோட், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கண்மணி அவர்கள் 15.12.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நடராசா அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, திருநாவுக்கரசு மற்றும் சாமி, சதாசிவம், நயினார், சண்முகராசா, ராசம்மா, பிள்ளையம்மா, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும். நடராஜா, சிவலிங்கராசா, ஆனந்தராசா, குலேந்திராசா, இந்திராதேவி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயாரும். சிவலிங்கம், கனகரெத்தினம், ஜெயந்தி, புஸ்பதேவி, சுகந்தா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (17.12.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழம் றோட்,*
*கந்தர்மடம்.*

(44203)
(54-11-13)

தகவல்:
அன்புச் சகோதரி
செ. மங்கையர்க்கரசி.

## தனபாலசிங்கம் யோகிதாஸ்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் தனபாலசிங்கம் அவர்களின் கனிஸ்ட புதல்வன் யோகிதாஸ் அவர்கள் 15.12.2005 அன்று காலை உயிர் நீர்த்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மாலை 5 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*இணுவில் கிழக்கு*
*இணுவில்.*

(44198)
(54-11-13)

தகவல்:
ஆ. தனபாலசிங்கம்
(சோதிலிங்கம் சுவாமியார்)

## செல்லன் பொன்னுத்துரை



காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் பொன்னுத்துரை அவர்கள் 15.12.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன்-பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா(ஸ்ரீ-பிரதேசசபை ,காரைநகர்), ஸ்ரீகுலராசா (பேபி-புடைவை வியாபாரம், நவீன சந்தை முன்பாக யாழ்ப்பாணம்),ஸ்ரீகுலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுருநாதன்(கிட்டி-சாரதி,இ.போ. ச.காரைநகர்), மலர், கௌசல்யாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் (காரைநகரில்) நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வின் வீதி,*
*காரைநகர்.*

(44203)
(54-11-13)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஸ்ரீ பத்மநாதன் ஸ்ரீவிஜயகுமார் (விஜயன்)



சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபத்மநாதன் ஸ்ரீவிஜயகுமார் நேற்று முன்தினம் (15.12.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கலாதேவி, சியாமளா ஆகியோரின் அன்புக் கணவரும், கிரிசாந், வினோராஜ் (மாணவர்கள், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்காந்தாவின் சகோதரனும், ஜெயபால கணேசன் (இலங்கை மின்சாரசபை, யாழ்.), ஜெகநாதன் (உடுவில் பிரதேசசெயலகம்), கெங்காதரன் (சுவிஸ்), அனுசுயா (ஜேர்மனி), சண்முகப்பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சுஜிதா (ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்), லஜிதா (வவுனியா கல்வியியற் கல்லூரி), செந்தூரன், பானுகா, சேந்தன், அபர்ணா, லஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.05) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலையம்புலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.*

(44206)
(54-11-13)

தகவல்:
மகன்

# பத்திரிகைப் பணிமனையில் படையினர் நடத்திய சோதனைக்கு தமிழ் ஊடகவியலாளர்கள் கண்டனம்

கொழும்பு, டிசெ. 17

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலத்தை இராணுவத்தினர் சோதனை நடத்தியதை இலங்கைத் தமிழ் ஊடகவியாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது. இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இது தமிழ்த் தேசிய ஊடகச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட மற்றுமோர் அச்சுறுத்தலாகவே ஒன்றியம் கருதுகின்றது. முன்னறிவித்தல் எதுவுமின்றி இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. பத்திரிகை ஆசிரியருக்கோ அல்லது பத்திரிகை நிறுவன இயக்குநருக்கோ இராணுவம் சோதனை செய்யப்போவதாக அறிவிக்கவில்லை.

சோதனை செய்யப்பட்ட பின்னரும் சோதனை மேற்கொண்டமைக்கான காரணத்தை இராணுவம் பத்திரிகை ஆசிரியரிடம் தெரிவிக்கவில்லை. இராணுவத்தினரின் இந்தச் செயலானது இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் சட்டத்திட்டங்களை மீறியுள்ளது. அத்துடன் ஊடகச் சுதந்திரம் பற்றிய புதிய அரசாங்கத்தின் கோட்பாட்டிற்கும் மாறாக உள்ளது. எந்தவொரு ஊடக நிறுவனம் மீதும் பொலீஸாரோ அல்லது இராணுவமோ சோதனை மேற்கொள்வதாக இருந்தால் சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனத்திற்கு அறிவிக்கவேண்டும் என்பது பொதுவான விதிமுறையாகும். ஆனால், 'நமது ஈழநாடு' பத்திரிகைக்காரியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையானது அந்த விதிமுறைகளுக்கு ஒப்பானதாக அமையவில்லை. எவ்வாறாயினும் எந்த விதிமுறைக்கு அமைவாகவேனும் ஊடக நிறுவனம் ஒன்றைச் சோதனை செய்ய வேண்டிய அவசியமும், உரிமையும் இராணுவத்திற்கு இல்லை என்பதையே ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ் ஊடகம் என்பதினால் - அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை என்பதினால் - இராணுவத்தினர் அவ்வாறு விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார்கள் என ஒன்றியம் சந்தேகிக்கின்றது. தமிழ் ஊடக்வியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் இராணுவத்தினர் பல தடவை தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர். அது தொடர்பாக இதுவரையும் அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் மீதான சோதனை நடவடிக்கை இடம்பெற்றிருக்காது.

எனவேதான், இனிமேலாவது இவ்வாறான ஊடகச் சுகந்திரத்திற்கு மாறான நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்ளாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றியம் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றது. அத்துடன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் ஊடக நிறுவனங்களையும், தமிழ் ஊடகவியாலாளர்களையும் சோதனைக்குட்படுத்துவதும் அவர்களைக் கைது செய்வதும் அல்லது மிரட்டுவதும் நாகரிகமற்ற செயல் என்பதுடன் அது குறித்தும் ஒன்றியம் மிகவும் கவலையும் வேதனையும் அடைகின்றது.

இவ்வாறு ஒன்றியத்தின் தலைவர் ஆனந்த் பாலகிட்ணர் மற்றும் செயலாளர் ஆர்.பாரதி ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இது தொடர்பாக ஊடக அமைச்சுக்கும் இவ்விவரங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை ஒன்றியம் ஊடகத்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ளது. (க)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் நின்ற இராணுவத்தினரால் தாக்கப்பட ஏனைய மூவரும் தங்கள் சைக்கிளையும் போட்டு விட்டு தப்பிச்சென்று விட்டனர் எனவும் - கூறப்படுகின்றது.

கைவிட்டுச் சென்ற சைக்கிள்களை படையினர் அருகில் உள்ள கடை ஒன்றில் வைத்துப் பூட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டபோதும், அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை எனவும் கூறப்பட்டது. (ஐ-12)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் போக்கிலும் அரசுத் தரப்பில் இருந்து புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி மஹிந்தவின் இந்த அழைப்பை புலிகள் அடியோடு நிராகரிக்கவே செய்வர் என்று அரசியல் வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

''வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளியில் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்கவேண்டும் இது எமது உறுதியான - இறுதியான - அவசர வேண்டுகோளாகும்'' என்று தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் புதிய அரசுக்கு அழைப்பு விடுத்திருந்தார்

இந்த அழைப்பை உரிய கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைக்க முயற்சிக்காமல், ஆசியநாடு ஒன்றில் வெறுமனே பேச்சு நடத்த வருமாறு அரசுத்தரப்பு விடுக்கும் அழைப்பை புலிகளின் தலைமை ஒருபோதும் ஏற்கமாட்டாது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போர்நிறுத்த விடயம் குறித்து புலிகளுடன் ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சுநடத்த வேண்டும் என்ற ஜே.வி.பியின் நிபந்தனை, புலிகளை ஐரோப்பிய சமூகத்தில் இருந்து ஓரங்கட்டி - தனிமைப்படுத்தி - அந்த நாடுகளில் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் அரசின் உள்நோக்கத்துடன் கூடிய கபடத் திட்டம் என்பதை புலிகள் அறிந்திருக்கிறார்கள். எனவே, மஹிந்த அரசின் இப்போதைய அழைப்புக்கு புலிகளிடமிருந்து சாதகமான சமிக்ஞை எதுவும் வர வாய்ப்பே இல்லை என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவை தொடர்பான புலிகளின் நிலைப்பாடு - தீர்மானம் - இன்று கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று ஊகிக்கப்பட்டது. (ஐ)






## அப்படி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்யவில்லை. ஆனால் முதலில் பேச்சு மேசைக்கு புலிகளை வரச் செய்து, அதன் பின்னர் கூடிப்பேசி எந்த விட யத்தை முன்னெடுக்கலாமெனத் தீர்மானிக்கலாம். பேச்சு மேசையில் அரசும், புலிகளும் இது விடயத்தில் தீர்மானம் ஒன்றுக்கு வரலாம்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளை வெளிநாட்டில் நடத்தக் கூடாதெனக் கொண்டிருந்த நிலைப்பாட்டை அரசு சற்று தளர்த்தியுள்ளது. ஆசிய நாடொன்றில் பேச்சுகளை நடத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அமைதிப் பேச்சுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுகளை நடத்தியுள்ளார். இதற்கமைய அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதி இலங்கை வரவுள்ளார்.

### நிபந்தனை இல்லை

இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பில் நோர்வே எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என வெளிவந்திருக்கும் செய்திகள் தவறானவை. அமைதி முயற்சிகளின் நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பில் நோர்வே அனுசரணையாளர்கள் சில யோசனைகளை முன்வைத்துள்ளனர். அவ்வளவு தான்.

### தெற்கில் ஒருமைப்பாடு

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தென்னிலங்கையின் கருத்தொருமைப்பாடு இருக்க வேண்டுமென புலிகளும், சர்வதேச சமூகத்தினரும் வலியுறுத்தி வருகின்றனர். அதனைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்தி வருகிறார். அமைதிப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறே ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் அரசாங்கத்திடம் கூறியிருக்கின்றன.

அரசின் அமைதி முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும் கூறியிருக்கிறது. அமைதி முயற்சிகளுக்கான ஆதரவளிக்கும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. ஒரு குரலில் அமைதிப் பேச்சுகளை நடத்த இது அரசுக்கு உதவும். - என்றார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா. (ஐ-க)


பெற்றோரே!
இதுவரை ஏமாந்தது போதும்.
விழித்தெழுங்கள்! உங்கள் பிள்ளைகளின் உன்னதமான கல்வி வளர்ச்சிக்காக
தரம் 1 முதல் O/L வரை
சகல பாடங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன
* தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை - (நாவலர் வெளியீடு) ஞாயிறு தோறும் காலை 8.30/10.30 மணி.
* தரம் 5 - புலமைப் பரிசில் வகுப்பும் நடை பெறுகின்றன.
* A/L கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஒழுங்கான ஆசிரியர்களின் உண்மையான வழிகாட்டலில்....
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## கடும் நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெயரில் வெளியிட்ட அறிக்கையில் இந்த நிபந்தனை குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அனுசரணைப் பணியைத் தொடர்வதில் நோர்வே உறுதியாக இருப்பதாக மேற்படி சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது என்று மட்டுமே அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இந்தச் சந்திப்பின் பின்னர் ஏ.எவ்.பிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

''அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரும் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் கூறினேன். ஆனால், அது கடுமையான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும் என்பதையும் தெரியப்படுத்தினேன்.

''இந்த விடயத்தில் புதிய நோர்வே அரசின் நிலைப்பாடு என்னவென்பதை அவர்கள் (இலங்கைத் தரப்பினர்) அறிவதற்குக் காத்திருப்பார்கள் என நினைக்கிறேன். எனவே, அனுசரணைப் பணி என்பது நோர்வேயினால் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டது என்ற முறையில் தொடர்ந்து மேற்கொளப்படும் என்பதை இலங்கை அமைச்சருக்குத் தெரியப்படுத்தினேன்.

''ஆனால் இத்தகைய பங்கு பணியை நாம் வகிப்பதானால் அதற்காக நடைமுறைப் படுத்தப்படவேண்டிய கட்டமைப்பு ஏற்பாடுகளும் களவிதிகளும் இருக்கும் என்பதையும் நான் வலியுறுத்தினேன்.

''எங்கிருந்து மீண்டும் ஆரம்பிப்பது என்பது குறித்து அரசியல் தலைமைகள் நேரில் பேசி முடிவெடுக்க இந்தச் சந்திப்பு வழிசெய்துள்ளது.

''எமது அனுசரணைப் பணி தெர்டர்வதாயின் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சங்கிலித் தொடரான சில நிபந்தனை விதிகளை எதிர்கொள்ள இணங்க வேண்டும்.

''இந்த சமாதான முயற்சி அவர்களுடையது. அதில் முன்னேற்றத்துக்கும் வீழ்ச்சிக்கும் அந்த இரண்டு தரப்புமே பொறுப்பு.

''இலங்கை விவகாரத்தில் நோர்வேக்கு எந்த அரசியல், பொருளாதார நோக்கமோ, இலக்கோ இல்லை. எனவே, எமது நாட்டின் லாபம் ஏதும் கருதாமல் இந்தப் பணியில் நாம் ஈடுபடுகின்றோம்.'' - என்றார் நோர்வே வெளிவிவகார அமைச்சர்.

இதேசமயம், இலங்கை - நோர்வே வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்புக் குறித்து வெளியான செய்திகள் சம்பந்தமாக அமைச்சர் மங்கள சமரவீரவின் இணைப்புச் செயலாளர் ஓர் அறிக்கை மூலம் மறுப்பு வெளியிட்டிருக்கின்றார்.

''இந்தச் சந்திப்புத் தொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே சரியான விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

''எனவே, பேச்சுகளை இயன்ற விரைவில் ஆரம்பிப்பதற்கான நடைமுறை ஏற்பாடுகள் குறித்தும் அமைதி முயற்சிகளுக்கு புது உத்வேகத்துடன் கூடிய ஆரம்பம் ஒன்றைச் செய்வதற்குமான புதிய அணுகுமுறை குறித்தும் இரண்டு புதிய அரசுகளும் கலந்துரையாடியிருக்கும் இச்சமயத்தில், சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக சில செய்திகளில் குறிப்பிடப்பட்டிருப்பது வேண்டுமென்றே தவறாக வழிநடத்தும் எத்தனமாகும்.'' - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ-க)

## குடாப்பொக்கணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பாக வெலிக்கந்தைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே ஏறாவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இலுப்பையடிச்சேனையைச் சேர்ந்த ஜெகதீசன் கண்ணன், கருவேப்பன்கேணியைச் சேர்ந்த கந்தசாமி சிவசங்கர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை செங்கலடிப் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் இருவரும் ஏறாவூர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நபர்களிடமிருந்து 2 கைக்குண்டுகளும் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளும் மீட்கப்பட்டன.

நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிவான் கே.தங்கவடிவேல் உத்தரவிட்டார். (ஐ-க)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போஸ்டரால் உளவுத்துறையினர் அதிர்ச்சியடைந்துள்ளனர் என்று இந்தியச்செய்திகள் தெரிவித்தன.

போஸ்டரில் அச்சகத்தின் பெயர், விலாசம் குறிப்பிடப்படவில்லை. தமிழக அரசால் 'தமிழ் தமிழர் இயக்கம்' தடை செய்யப்பட வில்லை எனவும், அதன் தலைவர் தியாகு என்பவர் கோவையைச் சேர்ந்தவர் எனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (ஐ-க)


விக்னா
கல்வி நிறுவனம்
நாடகமும் அரங்கியலும்
திரு. ரமேஷ்
A/L 2006
A/L 2007
ஆரம்பம்:
17.12.2005 11.30
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

* பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் வகையில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புகள், தேடுதல்களை நடத்துகின்றனர். இதனால் மக்கள் சீற்றமடைந்திருகின்றனர்.
* வீடுகள் சோதனையிடப்படுகின்றன. பொதுமக்களின் உடைகள், பொருள்கள் மிகவும் அநாகரிகமான முறையில் சோதிக்கப்படுகின்றன.
* வீடுகளில் மக்கள் வைத்துப் பூசிக்கும் மாவீரர்களின் படங்களை படையினர் அவமரியாதைக்குட்படுத்துகின்றனர். அவற்றை அகற்றுமாறு அச்சுறுத்துகின்றனர்.
* விடுதலைப் புலிகள் முன்னர் பயன்படுத்திய அலுவலகங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள தளபாடங்கள் மற்றும் பொருள்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுகின்றன.

இந்த விடயங்கள் போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் என்பதால் இது விடயத்தில் கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## கிழக்குக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாழமுக்கம் 36 மணித்தியாலங்கள்வரை நீடிக்கும் என்பதால் இன்று பிற்பகல் வரை வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்களில் மப்பும் மந்தாரமுமான காலநிலை இருப்பதுடன் இடி மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். கரையோரம் முதல் மட்டக்களப்பு திசையாகவுள்ள பொத்துவில் வரையான கடற்பகுதி கொந்தளிப்பாகக் காணப்படுவதால், மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அவதான நிலையம் ஆலோசனை வழங்கியுள்ளது. (ஐ-7)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரைப் பணித்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய அரசில் அமைதி முயற்சிகளில் முன்னின்று செயற்பட்ட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கு இப்போதும் அதற்கேற்றால் போல் அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்குவதற்கும் ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.